லஞ்சம், ஊழல் விழிப்புணர்வு ®

# மக்கள் விசாரணை

ஆண்டு-08 இதழ்-09 பிப்ரவரி-2020 மாதஇதழ் விலை ₹ 10

makkalvisaranai



# தமிழக வேளாண்மைத் துறைக்கு புதிய கட்டிடங்கள்

## முதல்வர் பழனிசாமி திறந்து வைத்தார்



வள்ளலார் அருளிய
கல்ப மருந்து
பத்தியமில்லா மருந்து
குணமாகும் நோய்கள்
GENERAL ENERGY TONIC
Herbal Tonic
Natural Health Care
■ புற்று நோய்கள்
■ இருதய அடைப்புகள்
■ உள் உறுப்புகளில்
ஏற்பட்டுள்ள அனைத்து வகையான கட்டிகள்
■ சிறுநீரக கற்கள்
■ சிறுநீரகக் கோளாறுகள்
■ கல்லடைப்பு
■ சதையடைப்பு
■ சிறுநீர் பிரச்சனை
■ இரத்த ஓட்டம் சீராகும்
■ சளி ■ இருமல் ■ கப ரோகங்கள்
■ கபம் ■ காசம் ■ சைனஸ்
■ கண்பார்வை கோளாறுகள்
■ வாதம் ■ பித்தம்
போன்ற அனைத்து விதமான நோய்களும் தீரும்
நோய்கள் சம்பந்தமாக சித்தமருத்துவரை அணுகி
ஆலோசனை பெற தொடர்பு கொள்ளவும்
சித்த மருத்துவர் K. இராஜமாணிக்கம்
அகத்தியர் மூலிகை மருத்துவ மையம்
எண்.10, கலைஞர் கருணாநிதி சாலை, சாலிகிராமம், சென்னை-600 093.
எண்.2/9, பிள்ளையார் கோவில் தெரு, மூன்லைட், இராமாபுரம், சென்னை-89
செல் : 99417 64922, 94441 80984

# தலையங்கம்

"அன்பாய்
அனைவரும்
ஒன்றிடுவோம்
பண்பால் உயர்ந்து
பயன்பெறுவோம்
தெம்பாய் உலகை
எதிர்கொள்வோம்
துன்பங்கள் யாவையும்
வென்றிடுவோம்
எங்கும் நிறை இறைவனை
போற்றிடுவோம்
இன்பங்கள் யாவையும்
பெற்றிடுவோம்"

## ஏன் இந்த குளறுபடி?

அரசு தொடக்க நடுநிலைப்பள்ளியில் படிக்கும் 5, 8ம் வகுப்பு மாணவர்களுக்கு பொதுத்தேர்வு நடத்த வேண்டும் என்று அரசு உத்தரவிட்டது. இதற்கு எதிர்க்கட்சிகள் மற்றும் பெற்றோர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். இது போன்ற பொதுத் தேர்வால் மாணவர்கள் மனதளவில் பாதிக்கப்படுவார்கள் என்று சமூக ஆர்வலர்கள் கருத்துதெரிவித்தனர். 5,8ம் வகுப்புக்கு பொதுத்தேர்வு நடத்துவதை அரசு கைவிட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது. ஆனால் இதையெல்லாம் காதில் போட்டுக் கொள்ளாத தமிழக அரசு 5,8-ம் வகுப்பு மாணவர்களுக்கு பொதுத் தேர்வு கட்டாயம் என்று அறிவித்தது. இதையடுத்து அரசு தரப்பில் இருந்து மீண்டும் ஒரு அறிவிப்பு வெளியானது. அதில், 5,8-ம் வகுப்பு பொதுத் தேர்வுக்கான தேர்வு மையங்களாக அருகாமையில் இருக்கும் பள்ளிகளை தேர்வு செய்து அமைக்க வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தது.

5,8ம் வகுப்பு மாணவர்களில் பலர் தங்கள் பள்ளிக்கு சென்று வருவதை மட்டுமே வழக்கமாக கொண்டவர்கள். அருகாமையில் உள்ள பள்ளி மற்றும் அதன் முகவரி அறியாதவர்கள். இப்படி இருக்கும் போது அவர்கள் தனியாக தங்கள் தேர்வு மையங்களை தேடி அலைந்து எப்படி செல்வார்கள். இதனால் மேலும் மன உளைச்சல் ஏற்படும் என்று பெற்றோர் தரப்பில் தெரிவித்தனர். பலத்த எதிர்ப்பை தொடர்ந்து அந்தந்த பள்ளிகளிலேயே 5,8ம் வகுப்பு பொதுத்தேர்வு மையங்கள் அமைத்துகொள்ளலாம் என்று தொடக்க கல்வித்துறை அறிவித்தது. இந்த குளறுபடி முடிவதற்குள் மீண்டும் ஒரு குளறுபடியை தமிழக அரசு செய்தது. அதாவது, அரசு பள்ளிகள், ஊராட்சி பள்ளிகள், அரசு உதவி பெறும் பள்ளிகள் ஆகியவற்றுக்கு தேர்வு கட்டண விலக்கு அளித்துள்ளது. அதே போன்று கல்வி உரிமை சட்ட இடஒதுக்கீட்டின் கீழ் பள்ளியில் சேர்ந்த மாணவர்களுக்கும் இது பொருந்தும் என்று தெரிவித்துள்ளது.

அதே சமயம், அனைத்துவித தனியார் பள்ளிகளில் படிக்கும் மாணவர்கள் 5ம் வகுப்பு தேர்வு எழுத ரூ.100, 8ம் வகுப்பு தேர்வு எழுத ரூ.200 கட்டணம் செலுத்த வேண்டும் என்று அறிவித்துள்ளது. இதனால் தனியார் பள்ளி நிர்வாகத்துக்கும், ஆசிரியர்களுக்கும் கூடுதல் சுமையாகியுள்ளது. கட்டணம் குறித்து விவரங்களை முன்கூட்டியே அறிவித்து பணத்தை ஆண்டு தொடக்கத்திலேயே வசூலித்துவிட்டால் தேர்வு நேரத்தில் சிரமம் குறைவாக இருக்கும் என்பது அனைத்து தரப்பினரின் ஆலோசனையாக உள்ளது. திட்டமிடுதலில் உள்ள குளறுபடிகளை சரி செய்து கொண்டு ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும், பெற்றோர்களுக்கும் தேவையற்ற மனஉளைச்சல் தருவதை ஆரம்ப கல்வித்துறை தவிர்க்க வேண்டும் என்பதே கல்வி ஆர்வலர்களின் கருத்தாக உள்ளது.

**- ஆசிரியர்**

# விளைநிலங்களை இழக்கப் போகும் தமிழக விவசாயிகள்!

விவசாயத்தில் உற்பத்தித் திறனை மேம்படுத்துவது, சமத்துவத்தை கொண்டு வருவது, விவசாயிகளுக்குக் கிடைக்கும் வேலைவாய்ப்புகளைப் பன்முகப்படுத்துவது, கிராமப்புற பொருளாதாரத்தை விரைவாக மாற்றியமைப்பதே இந்த சட்டத்தின் நோக்கமென நிதி ஆயோக் கூறுகிறது. உண்மையில் இந்த சட்டம் வேலைவாய்ப்பையும், உற்பத்தித் திறனையும் மேம்படுத்த தான் கொண்டு வரப்பட்டுள்ளதா என்ற கேள்வியை விவசாய அமைப்புகள் எழுப்புகின்றன.

புதிய சட்டத்தில் அரசின் பங்கு: விவசாயிகள் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கு இச்சட்டத்தால் அமைக்கப்படும் குழு விலையை நிர்ணயம் செய்யும். அதன்படி ஒருபயிர் பயிரிடப்படும் முன்பே அதற்கான விலையை அக்குழு ஒப்பந்த அடிப்படையில் நிர்ணயம் செய்துவிடும். சாகுபடி முடிந்ததும் அவ்விலைக்கு அப்பொருள் எடுத்துக் கொள்ளப்படும் என்று புதிய விவசாய ஒப்பந்த சட்டம் கூறுகிறது. அப்படியென்றால் அரசு எதற்கு?

உண்மையில், இந்த சட்டம் விவசாயிகளுடன் அரசு கொண்டுள்ள உறவை வெட்டி விட்டுள்ளது. அதாவது நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் காணாமல் போகும். விலையை இனி கார்ப்பரேட் கம்பெனிகள் தான் முடிவு செய்யப்போகிறார்கள். அத்துடன் என்ன விதை, இடுபொருள், என்ன பூச்சிக்கொல்லி, என்ன தொழில்நுட்பம் பயன்படுத்த வேண்டும் என கார்ப்பரேட் முதலாளிகள் தான் தீர்மானிக்கப் போகிறார்கள். இனி விவசாயி தன் வயலில் என்ன விளைவிக்க வேண்டும் என்று நினைத்துக் கூட பார்க்க முடியாது.

பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் ஐரோப்பிய சந்தைக்கு தேவைக்காக இந்திய விவசாயிகளை அவுரி சாகுபடி செய்யச் சொல்லி வற்புறுத்தி கொடுமைப்படுத்தினர். இதை எதிர்த்து அவுரி விவசாயிகள் எழுச்சிமிகு போராட்டத்தை நடத்தியதாக வரலாறு உண்டு. மீண்டும் அப்படியான வரலாற்றுப் போராட்டத்திற்குத் தான் இந்த சட்டம் இட்டுச் செல்கிறதோ என்ற அச்சம் தமிழக விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ளது.

ரசாயனப்பயன்பாடு அதிகரிக்கும்: தமிழகத்தில் தற்போது இயற்கை விவசாயம் செய்யும் விவசாயிகள் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. இதனால், பாரம்பரிய விதைகள் மீண்டும் பயன்பாட்டுக்கு வந்துள்ளன. இந்த நிலையில் ஒப்பந்த சாகுபடி சட்டம் நடைமுறைக்கு வந்தால், மீண்டும் ரசாயனப் பயன்பாடு அதிகரிக்கும் அபாயம் ஏற்படும். விதைப்பதற்கு முன்பே கொள்முதல் நிர்ணயிக்கப்படும் என இம்முறை கூறுகிறது. ஒப்பந்தம் செய்த தினத்தன்று நிர்ணயித்த விலையிலேயே பரிமாற்றம் செய்யப்படும் என்று அரசு கூறுகிறது, ஆனால் கொள்முதல் செய்யப்பட்ட பொருளுக்கு ஒப்பந்த நிறுவனங்களே விலை நிர்ணயம் செய்யும். தாங்கள் உற்பத்தி செய்த பொருட்களை பல மடங்கு விலை கொடுத்து தான் விவசாயிகள் வாங்க வேண்டிய நிலை ஏற்படும்.



நிலங்களிலிருந்து விவசாயிகளை வெளியேற்றவே இந்த சட்டம்: இயற்கை வேளாண்மை விஞ்ஞானி பாமயன் கூறுகையில், ‘‘குஜராத் உள்பட பல மாநிலங்களில் தோல்வியடைந்த இந்த சட்டத்தை தான் தமிழக அரசு கொண்டு வந்துள்ளது. தமிழகத்தில் சிறு, குறு விவசாயிகள் அதிகமாக உள்ளனர். ஒவ்வொருவரும் ஒரு பயிரை விளைவிக்கின்றனர். எனவே, விவசாயிகளை நிலங்களில் இருந்து வெளியேற்றி விட்டால், கார்ப்பரேட் கம்பெனிகள்



வசம் விவசாயம் போய் விடும். அதற்காகத் தான் இந்த சட்டம் அமல்படுத்தப்பட்டுள்ளது. இந்த சட்டத்தால் ஒரு குறிப்பிட்ட பயிர், அதாவது ஒரு கம்பெனி விரும்பிய பொருள் தான் விளைவிக்க முடியும். இந்தியாவை விட அமெரிக்காவில் பருத்திக்கு மானியம் அதிகம் கிடைக்கிறது. எனவே, பருத்தியை அதிகம் சாகுபடி செய்தால், தமிழகத்தில் நெல் உள்ளிட்ட உணவுப்பொருள் உற்பத்தி மட்டுமின்றி உணவுத்தட்டுப்பாடும் ஏற்படும். இதேபோல விவசாயிகளிடம் விலை நிர்ணயம் செய்வதில் அத்துமீறல் நடக்க நிறைய வாய்ப்பு உள்ளது.

ஏனெனில், ஒப்பந்தத்தின் போது விளையும் பொருட்களின் அளவு இவ்வளவு வேண்டும் என்பார்கள். அப்படி விளையாத போது, அவர்கள் கேட்கும் விலைக்குத் தான் விவசாயி விற்க வேண்டிய நிலை ஏற்படும். மேலும், இந்த ஒப்பந்த முறை உணவு உற்பத்தியை அதிகரிப்பதற்குப் பதில் ஏற்றுமதியை மையப்படுத்தியே உள்ளது. அத்துடன் விவசாயி உற்பத்தி செய்யும் பொருளை அவர் இனி விற்க முடியாது என்பது மிகக்கொடுமையான சட்டம், விவசாயிகளை நிலங்களை விட்டு வெளியேற்ற நினைக்கிறது.

ஜனநாயகத்திற்கு எதிரான சட்டம்: தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாநில பொதுச்செயலாளர் பெ.சண்முகம் கூறுகையில், ''வேளாண் விஞ்ஞானி எம்.எஸ்.சுவாமிநாதன் குழு பரிந்துரைபடி வேளாண் பொருட்களுக்கு 50 சதவீத விலையை உயர்த்தி வழங்குகிறோம் என வாக்குறுதி அளித்து தான் 2014ம் ஆண்டு பாஜ ஆட்சிக்கு வந்தது. அதற்கு எதிரான விவசாய ஒப்பந்தமுறை சட்டத்தை அமல்படுத்த வேண்டும் என்று 2018ம் ஆண்டு மார்ச் மாதம் அனைத்து மாநில அரசுகளுக்கும் சுற்றறிக்கை அனுப்பியது. எந்த மாநிலமும் அதை சட்டமாக்கவில்லை. ஆனால், தமிழக அரசு விரைந்து அதை சட்டமாக்கியுள்ளது. ஒரு சட்டம் இயற்றப்பட்டால் அதை ஜனநாயகப்பூர்வமாக மக்களால் தேர்வு செய்யப்பட்ட எம்எல்ஏக்கள் முன் விவாதம் நடத்தி நிறைவேற்ற வேண்டும். ஆனால், அந்த ஜனநாயக நெறிமுறைகளை மீறி இந்த சட்டம் நிறைவேற்றப்பட்டது வன்மையான கண்டனத்திற்குரியது. எனவே, விவசாயத்திற்கு, எதிரான சட்டத்தை உடனடியாக வாபஸ் பெற வேண்டும்'' என்கிறார்.

நிலம் மலடாகும்: இந்த சட்டத்தில் பயிர்த் தொழிலோடு, தோட்டப் பயிர்கள், கால்நடை வளர்ப்பு பால் உற்பத்தி, கோழி வளர்ப்பு, இறைச்சி விலங்கு வளர்ப்பு, மீன் வளர்ப்பு, விவசாயக் காடுகள், விளைபொருள் பதப்படுத்தல் மற்றும் தொடர்புடைய பிற நடவடிக்கைகளும் அனுமதிக்கப்படுகின்றன. இதனால் விவசாயி பயன்படுத்தும் நிலம் குத்தகை காலம் முடிந்த பின் பயிரிடுவதற்கான மண்ணாக இல்லாமல் மலட்டுத்தன்மை ஏற்படும். நிலத்தின் மண்வளம் பாதிப்படைந்தால் குத்தகையை ரத்து செய்யலாம் என்ற இந்தச் சட்டம் சொன்னாலும், மண் வளம் பாதிப்படைந்ததா இல்லையா என்பதை யார் தீர்மானிப்பார்கள் என்று சட்டம் சொல்லவில்லை. நிலத்தை கையப்படுத்தும் கார்ப்பரேட்டுகளுக்கு எதிராக விவசாயி கேள்வி கேட்க முடியுமா? எந்த பயிரை எப்போது விளைவிப்பது என இனி விவசாயி முடிவெடுக்க முடியாது. விவசாயிகளிடமிருந்து குத்தகை காலம் முடிந்த பிறகு நிலமேம்பாடு முதலீடு செய்த மதிப்பில் எஞ்சியதை கார்ப்பரேட் நிறுவனங்கள் திரும்பப்பெறும் உரிமையை இந்த சட்டம் தந்துள்ளது.

இதன் மூலம் நில மேம்பாடுக்கு செய்த தொகை என விவசாயிகளிடம் கார்ப்பரேட் நிறுவனங்கள் மிரட்டி நிலத்தை சுருட்டவும் வழி வகை செய்யும். அத்துடன் இந்த சட்டப்படி கார்ப்பரேட் நிறுவனங்கள் ஒப்பந்தம் என்ற பெயரில் விளைநிலங்களை மீத்தேன், ஹைட்ரோகார்பன், போன்ற பேரழிவு திட்டங்களுக்கு அபகரிக்கவே வழிவகுக்கும். காப்புரிமை என்ற பெயரில் விவசாயிகளை அடிமைப்படுத்துவதுடன் விவசாயிகளின் நிலங்கள் பறிபோகும். சுயசார்பு பொருளதாரம் கொண்ட விவசாயத்தை, சில கம்பெனிகளிடம் அடகு வைக்கும் அரசின் முயற்சி கண்டிக்கத்தக்கது. எனவே, இந்த சட்டத்தை உடனடியாக வாபஸ் பெற வேண்டும் என விவசாய அமைப்புகள் ஓங்கி குரல் எழுப்புகின்றன.

**– வீ. சிவசங்கர்**

# வறுமை: இந்தியாவின் நிரந்தர அடையாளமாகிறதா?

இந்தியாவின் அடிப்படை பிரச்சினைகளில் ஒன்று, சமத்துவமின்மை. பொருளாதார ரீதியாகவும், வாழ்வுரிமை ரீதியாகவும் இந்தியா கடும் ஏற்றத்தாழ்வை கொண்ட நாடாக உள்ளது. மக்கள் தொகையில், உயர் வர்க்கத்தில் உள்ள 10 சதவீத பிரிவினரிடமே 80 சதவீத சொத்துகள் இருக்கின்றன. இந்த விகிதாச்சாரமே இந்தியாவை மீள முடியாத சுழலுக்குள் தள்ளியுள்ளது. இவை தலைமுறை தலைமுறையாக மக்களை வறுமையில் ஆழ்த்தச் செய்கிறது.

இந்தியாவைப் பொறுத்தவரையில் தனிநபரின் 'நுகர்வு திறன்' அடிப்படையில் வறுமைக்கோடு கணக்கிடப்படுகிறது. கிராமப்புறத்தில் நாளொன்றுக்கு 32 ரூபாயும், நகர்ப் புறத்தில் 47 ரூபாயும் செலவிட முடியாத சூழலில் இருக்கும் நபர்



வறுமைக்கோட்டுக்குகீழ் உள்ளவராக அடையாளப்படுத்தப்படுகிறார். இது 2012-ம் ஆண்டில் உருவாக்கபட்ட ரங்கராஜன் குழுவின் அளவீடு. அதன்படி 2011-12-ன் இந்தியா முழுமைக்குமாக 29.5 சதவீதத்தினர் வறுமைக்கோட்டுக்கு கீழ் உள்ளனர். இந்திய மக்களில் ஐந்து பேர்களில் ஒருவர் வறுமைக்கோட்டுக்குகீழ் வாழ்கிறார்.

சமீபத்தில் தேசிய புள்ளிவிவரங்கள் அலுவலகத்தின் அறிக்கை ஒன்று வெளியே கசிந்தது. அதில் மக்களின் நுகர்வு திறன் 2011-12-ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2017-18-ல் 3.7 சதவீதம் அளவில் சரிந்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. குறிப்பாக கிராமப் புறத்தில் நுகர்வு திறன்10சதவீதம் சரிந்துள்ளதாக அந்த அறிக்கை சுட்டிக்காட்டுகிறது. நுகர்வு திறன் என்பது ஒரு தனி நபர் தனது அத்தியாவசியத் தேவைகளை பூர்த்தி செய்யக்கூடிய அளவுக்கு அவரிடம் பணப் புழக்கம் இருப்பதை குறிப்பது.

தனி நபர், 2011-12-ம் ஆண்டில் மாதம் சராசரியாக ரூ.1,501 செலவிடும் திறனுடைய வராக இருந்தநிலையில், 2017-18-ல் அது ரூ.1,446-ஆக குறைந்துள்ளது. கிட்டத்த இந்த 7 ஆண்டுகளில் வறுமைக் கோட்டுக்குகீழ் இருப்பவர்களின் எண்ணிக்கை 4 சதவீதம் அதிகரித்துள்ளது. அதாவது கூடுதலாக 3 கோடி பேர் வறுமைக் கோட்டுக்கு கீழே சென்றுள்ளனர்.

பொருளாதாரத்தைப் பொறுத்தவரை மூன்று காரணிகள் மிக முக்கியமானவை. தனிநபர் நுகர்வு, முதலீடு மற்றும் ஏற்றுமதி. தற்போது இந்த மூன்றும் பெரும் சரிவை சந்தித்துள்ளன. மக்களின் நுகர்வு திறன் கடந்த 50 ஆண்டுகளில் இல்லாத அளவில் சரிந்துள்ளது என்பதே சமீபத்திய அச்சுறுத்தலான செய்தி. மக்கள் நுகர்வு திறன் குறைவது என்பது, அந்த நாட்டில் வறுமை அதிகரிக்கிறது என்பதற்கான அறிகுறி. போதிய வருவாய் ஈட்ட முடியாத நிலையிலேயே மக்களின் நுகர்வு திறன் பாதிக்கப்படுகிறது. இங்கு நாம் இரண்டு காரணிகளை கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

ஒன்று தனிநபர் வருவாய்; மற்றொன்று விலைவாசி. தற்போதுள்ள முக்கிய பிரச்சினை என்னவென்றால் தனி நபர் வருவாய் 7 ஆண்டுகளுக்குமுன் எந்த நிலையில் இருந்ததோ, அதே நிலையில்தான் தற்போதும் இருக்கிறது. குறிப்பிடும்படியாக மேம்படவில்லை. ஆனால் விலைவாசியோ இருமடங்காகிவிட்டது. உதாரணமாக 7 ஆண்டுகளுக்கு முன் ஒரு டீ-யின் விலை 5 ரூபாய். ஆனால் தற்போது 10 ரூபாய். எனில், போதிய வருமானம் இல்லாத ஒருவரால் இந்தச் சூழலை எவ்வாறு எதிர்கொள்ள முடியும்? பணமதிப்பிழப்பு மற்றும் ஜிஎஸ்டி நடைமுறைப்படுத்தப்பட்ட பிறகு இந்தச் சூழல் மேலும் அதிகரித்துள்ளதாக ஆய்வுகள்

சுட்டிக்காட்டுகின்றன. உணவு நுகர்வு குறைவு தலைமுறை ரீதியிலான தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய ஒன்று. உதாரணமாக கணவன், மனைவி, ஒரு குழந்தை அடங்கிய ஒரு குடும்பம், தனது ஒருவேளை உணவைக் குறைத்துக் கொள்கிறது எனில், அந்தக் குழந்தையின் வளர்ச்சி? இந்தியக் குழந்தைகளில் 20 சதவீதக் குழந்தைகள் பட்டினியால் வாடுவதாக உலக ஆய்வறிக்கை ஒன்று கூறுகிறது. தற்போதைய சூழலில் ஏழைகள் அவர்களுடைய வருமானத்தில் 69 சதவீதத்தை உணவு சார்ந்தவற்றுக்காகவும், 6 சதவீதத்தை கல்வி, உடல்நலத்துக்காகவும் செலவிடுகின்றனர்.

கிராமப் புறங்களில் உணவுப் பொருட்கள் சார்ந்து தனிநபர் செலவீனம் 2011-12-ல் மாதம் ரூ.643-ஆக இருந்தது, 2017-18-ல் ரூ.580-ஆக குறைந்துள்ளது. ஏற்கெனவே கல்வி ரீதியாக பின்தங்கி இருக்கும் அக்குடும்பம் தற்போதைய பொருளாதார சூழலால் கல்விக்கான செலவை குறைத்துக் கொள்ளத் தொடங்கியுள்ளது. விளைவாக அக்குடும்பத்தின் அடுத்த தலைமுறையும் கல்வியறிவு இல்லாத தலைமுறையாகவே உருக்கொள்கிறது.

கடந்த 45 ஆண்டுகளில் இல்லாத அளவில் வேலையின்மை உயர்ந்துள்ளது. குறிப்பாக பட்டதாரி இளைஞர்களிடையே வேலை யின்மை அதிகரித்து இருக்கிறது. வடமாநிலங் களில் வேலையின்மையால் இளைஞர்கள் தற்கொலை செய்துகொள் கிறார்கள் என்ற செய்து எளிதாக கடந்து செல்லக்கூடியது அன்று. கல்லூரி படிப்புக்குப் பிறகு ஒரு இளைஞனுக்கு வேலையில்லை என்றால் அந்தக்குடும்பத்தின் கதி என்னவாகும்? இந்தியா இந்த அபாயத்தை நோக்கிதான் சென்று கொண்டிருக்கிறது. வேலையில்லை என்பது ஒருபக்கம் என்றால், இன்னொருபுறம் போதிய ஊதியமின்மை. நிறுவனங்கள் அதன் பணியாளர்களின் ஊதியத்தை பெரும் அளவில் குறைத்துவருகிறது.

வருடாந்திர ஊதிய உயர்வு என்பது தற்போது நினைத்துப் பார்க்க முடியாத ஒன்றாக மாறியுள்ளது. இதனால் வேலையில் இருப்பவர் களின் நுகர்வு திறனும் பாதிக்கப்படுகிறது. இது பொருளாதாரத்தை பெருமளவில் பாதிக்கும்.



தவிர ஜிஎஸ்டியால் பலரும் நுகர்வை குறைத்துக் கொண்டுள்ளனர். வறுமையும் வேலை யின்மையும் ஒன்றுக்கொன்று பின்னிப் பிணைந்தவை. இவற்றின் விளைபொருள் என்னவாக இருக்கும்? வேலை என்பது வருவாயுடன் மட்டும் தொடர்புடையது அல்ல; அது ஒரு நபருக்கு சமூகம் சார்ந்து சில பொறுப்புகளையும் அளிக்கிறது. வேலையில்லாமல் வறுமையில் வாழும் ஒருவர், சமூகத்துக்கு அச்சுறுத்தலாக மாறும் அபாயமும் உள்ளது. வாழ்வின் மீதும் எந்தப் பிடிப்புமற்று திரியும் இளைஞர்களை அரசியல் கட்சியினர்கள் தங்கள் அடியாட்களாக பயன்படுத்துவதாக புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. இது இந்தியா எதிர்கொண்டு வரும் பிரிதொரு முக்கியமான அச்சுறுத்தல்.

இவையெல்லாம் தவிர, இந்தியாவில் வாழ்க்கைத் தரம் மிக மோசமாக உள்ளது. இங்கு பெரும் செல்வந்தரும் சுகாதாரமான காற்றை பெற்றுவிட முடியாது. காற்று மாசு, சுகாதாரமற்ற குடிநீர், தரமற்ற உணவுகள், முறையற்ற கட்டமைப்புகள், நீதியின்மை, சாதியக் கொடுமைகள், ஊழல், பாலினப் பாகுபாடு எனப் பலவும் இந்தியாவின் தரத்தை மட்டுப்படுத்துகின்றன.

130 கோடி மக்களில் பாதிக்கும் மேற்பட்டோரின் தனி நபர் வருமானம் ஒரு வேளை உணவுக்கே போதுமானதாக இல்லை. இந்த நிலையில் தன் மக்களை வைத்துக்கொண்டுதான், பொருளாதார ரீதியாக உலகில் 6-வது பெரிய நாடு என இந்தியா பெருமிதம் கொள்கிறது.

**- அகிலாண்டேஸ்வரி**



# இயற்கை வேளாண் முறையில் ஒரே இடத்தில் 110 வகையான பாரம்பரிய நெல் ரகங்களை பயிரிட்டுள்ள விவசாயி

இயற்கை வேளாண் முறையில், 110 வகையான பாரம்பரிய நெல் ரகங்களை காரைக்கால் விவசாயி தனது வயலில் பயிரிட்டுள்ளார். காரைக்கால் மாவட்டம் வரிச்சிக்குடியைச் சேர்ந்தவர் எம்.பாஸ்கர். கடந்த 12 ஆண்டுகளாக இயற்கை விவசாயத்தில் ஈடுபட்டு வரும் இவர், தற்போது 110 வகையான பாரம்பரிய நெல் ரகங்களை தனது வயலில் பயிரிட்டுள்ளார். இதுகுறித்து எம்.பாஸ்கர் கூறியதாவது: நம் நாட்டில் ஏராளமான நெல் ரகங்கள் இருந்துள்ளன. அவை காலப்போக்கில் அழிந்துவிட்டன. நம்மாழ்வார், நெல் ஜெயராமன் உள்ளிட்டோரின் முயற்சிகளால் சில நெல் ரகங்கள் மட்டும் மீட்டெடுக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

கடந்த ஆண்டு 25 பாரம்பரிய ரகங்களை பயிரிட்டிருந்தேன். நிகழாண்டு, பல இடங்களுக்கும் சென்று, நண்பர்களின் உதவியுடன் விதைநெல்லை சேகரித்து, 5 ஏக்கர் பரப்பளவில் ஒட்டடையான், மாப்பிள்ளைச் சம்பா, கருப்புக் கவுனி, காட்டு யானம், ராஜமன்னார், மிளகு சம்பா, கிச்சடி சம்பா, கட்டை சம்பா உள்ளிட்ட 110 வகையான நெல்ரகங்களை சாகுபடி செய்துள்ளேன். இந்த நெல் ரகங்களில் பல்வேறு மருத்துவ குணங்கள் உள்ளன என்றார்.

இந்நிலையில், அந்த விளைநிலங்களை கூடுதல் வேளாண் இயக்குநர் (பொ) ஜெ.செந்தில்குமார் உள்ளிட்ட வேளாண் அதிகாரிகளுடன், புதுச்சேரி வேளாண்துறை அமைச்சர் ஆர்.கமலக்கண்ணன் நேற்று முன்தினம் பார்வையிட்டு நெல் ரகங்கள், தன்மைகள் குறித்து கேட்டறிந்தார்.

பின்னர், செய்தியாளர்களிடம் அமைச்சர் கூறியதாவது:



இயற்கை விவசாயம் பல இடங்களில் செய்யப்பட்டிருந்தாலும், இங்கு மட்டும்தான் ஒரே இடத்தில் 110 பழமையான நெல் ரகங்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளன. 10 ஆண்டுகளாக இந்த இடத்தில் இயற்கை வேளாண்மை நடைபெறுவதால், அதற்கேற்ற வகையில் தற்போது மண்வளம் மாறியிருப்பதை விளைச்சல் மூலம் காண முடிகிறது. இந்த விவசாயியின் முயற்சி பாராட்டத்தக்கது. இதை ஆவணப்படுத்தி ஊக்கப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை புதுவை வேளாண்துறை மேற்கொள்ளும். இதுகுறித்து மத்திய உணவு அமைச்சரின் கவனத்துக்கும் கொண்டு செல்லப்படும் என்றார்.

– **இர்வின்**


**வாழ்க தமிழ்!** **வளர்க தமிழகம்!!**

# மக்கள் விசாரணை ®

மக்களின் மனக்குமுறல் — மாத இதழ்

**லஞ்சம், ஊழல் விழிப்புணர்வு**

**ஆண்டு-08 இதழ்-09 பிப்ரவரி - 2020**

**ஸ்ரீ திருமலை பப்ளிகேஷன்ஸ்** சார்பாக
வெளியிடுபவர் & ஆசிரியர்
முனைவர் **ஆ.மவுரியன்**, B.A., M.A., Ph.D.(Hons).

ஆசிரியர் குழு
**V.அருணாச்சலம், A.C.குமார், S.அனந்த கிருஷ்ணன்**, MA.,

இதழியல் ஆலோசகர்
**P. ஆறுமுகம்**, B.Sc., A.E.M.S.A.C.,
Rtd. Sr. Audit Officer, Scientific Departments (C&AG of India) New Delhi

நிர்வாக ஆசிரியர்
**வீ.சிவசங்கரன்**, B.B.A.,

**துணை ஆசிரியர்கள்**
K.ரமேஷ்குமார், D.ரவி, S.சரவணன்
P.மாரிமுத்து, வீர ஆறுமுகம், M.தரணி
அ.மு.ரமணாத்திரி, S.சுப்ரமணியன்

**முதன்மை செய்தியாளர்கள்**
P.தாமோதரன் சேலம், Dr. M.சத்தியராஜ் நாமக்கல்
N.சிலம்பரசு தர்மபுரி, A.D.ராஜேந்திரன் விழுப்புரம்
குருபாலகிருஷ்ணன், R.ஜெயா தென்சென்னை
S.மோகன், M.முருகம்மாள் திருப்பத்தூர்
P.சுப்பிரமணியன் திருநெல்வேலி, நாகராஜ் மூணாறு

**நிருபர்கள்**
P.ராமலிங்கம், ஆப்ரகாம், K.L.ராஜேந்திரன்
S.ஏழுமலை, M.நிவேதிதா, N.சீனிவாசன்
Dr.K.ராஜமாணிக்கம், இர்வின், கனகதுர்கா
சதீஷ், அகிலாண்டேஸ்வரி, குருதேவ்
சச்சின், B.நாராயணசாமி, நீலகண்டன்
G.ராஜேஷ்கண்ணா, R.பார்த்தசாரதி, M.முருகன்
G.ஆனந்த்குமார், M.சரவணன் தி.மலை
R. சத்தியமூர்த்தி, C. அன்பழகன்

சட்ட ஆலோசகர்கள்
**M.குணசீலன்** B.Com., M.L., **M.சுதாகர்** B.Sc., B.L.,
(உயர்நீதிமன்றம், சென்னை)

புகைப்பட நிருபர் : **M. அருணாச்சலம்**

இதழ் வடிவமைப்பு : **ஆப்பிள் பிரிண்டர்ஸ்**


நிர்வாக அலுவலகம்



**மக்கள் விசாரணை**
எண்: 7/13, பொன்மனசெம்மல் தெரு, 12வது தெரு,
எம்.ஜி.ஆர். நகர், சென்னை - 600 078.
writermouriyan@gmail.com, news@makkalvisaranai.com
www.makkalvisaranai.com
93821 33334, 044 - 4861 5321



முனைவர் ஆ.மவுரியன்




தொடர் 27

## தமிழின் முதல் பெண் நாவலாசிரியர்

# வை. மு. கோதைநாயகி

**சுதந்திர போராட்டத்தில் சிறை சென்றவர்களை வன்முறை பாதையிலிருந்து திசை திருப்பி காந்திய பாதைக்குக் கொண்டு சென்றவர்**

வை.மு.கோதைநாயகி தமிழகத்தைச் சேர்ந்த ஒரு புதின எழுத்தாளர் ஆவார். துப்பறியும் புதினம் எழுதிய முதல் தமிழ்ப்பெண் எழுத்தாளராவார். மேடைப் பேச்சாளர், கவிஞர், சமூகநல ஊழியர், இதழாசிரியர், இந்திய விடுதலைக்காகப் போராடியவர் என்று பல துறைகளிலும் சிறந்து விளங்கியவர் வை.மு.கோதைநாயகி அம்மாள். இவரை சமகால எழுத்தாளர்கள், "நாவல்ராணி, கதா மோகினி, ஏக அரசி" என்று போற்றினர். இதுவரை வெளிவந்துள்ள தமிழ் இலக்கிய வரலாற்று நூல்கள் இவரைச் சரியாக அடையாளம் காட்டவில்லை. 115 புதினங்களை எழுதியவர். தான் வாழ்ந்த 59 ஆண்டுகளில் 35 ஆண்டுகள் எழுத்தே உலகம் என்று இயங்கினார்.

கோதைநாயகி, திசம்பர் 1, 1901 ஆம் ஆண்டு, செங்கல்பட்டு மாவட்டம், நீர்வளூரில் வாழ்ந்த என். எஸ். வெங்கடாச்சாரி, பட்டம்மாள் ஆகியோருக்கு இரண்டாவது குழந்தையாகப் பிறந்தார். வைணவ குடும்பத்தைச் சேர்ந்த இவரை சிறு வயதில் கோதை என்றும் ஆண்டாள் என்றும் செல்லமாக அழைத்தனர். பிறந்த ஒரு வயதிலேயே தனது தாயை இழந்தார். அதனால் அவரது பாட்டி வேதவல்லி அம்மாளும், அவரது சிற்றப்பா மனைவியான கனகம்மாளும் அவரை வளர்த்தனர். தன் சிற்றப்பா திருத்தேரி ராகவாச்சாரியாரிடம் நாலடியார், தேவாரம், திருவாசகம், கம்பராமாயணம், திருவாய்மொழி முதலிய பல தமிழ் இலக்கியங்களைக் கற்றார்.

சிறுவயதிலே திருமணம் செய்து வைக்கும் வழக்கம் இருந்த காலம் என்பதால் 1907இல் கோதைநாயகிக்கு ஐந்தரை வயதான போது திருவல்லிக்கேணியில் வசித்து வந்த வை.மு. சீனிவாச அய்யங்காரின் மூன்றாவது மகனான ஒன்பது வயது நிரம்பிய வை.மு. பார்த்தசாரதிக்குத் திருமணம் செய்து கொடுத்தனர். கோதைநாயகியின் புகுந்த வீட்டினர் தீவிர வைணவ மரபின் வழிவந்தவர்கள். 'வைத்தமாநிதி முடும்பை குடும்பம்' என்ற பெயர் பெற்ற அக்குடும்பத்தினருக்கு அக்காலத்தில் திருவல்லிக்கேணியிலும், வைணவ சமூகத்திலும் தனிமதிப்பு இருந்தது. அக்குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் தங்களது பெயருக்கு முன்னால் வை.மு. என்ற எழுத்துக்களைச் சேர்த்துக் கொண்டனர். வைத்த மாநிதி என்பது அக்குடும்பத்தினரின் குலதெய்வமான திருக்கோளூர் பெருமாளின் பெயராகும். முடும்பை என்பது அவர்களின் பூர்வீக ஊராகும். கோதைநாயகிக்கும் திருமணத்துக்குப் பின்னர் 'வை.மு.' என்ற குடும்பப்பெயரை இணைத்து

வை.மு. கோதைநாயகி என அழைத்தனர். கோதை நாயகியின் வெற்றிக்கு அவரது செயல்கள் அனைத்திலும் கை கொடுத்து நின்றவர் கணவர் பார்த்தசாரதி தான். திருமணத்தின்போது கோதைநாயகி பள்ளி சென்று படித்தவரில்லை. பார்த்தசாரதி, அவரைக் கல்வி கற்கச் செய்தார். கோதைநாயகி, தனது மாமியாரிடம் தெலுங்கு மொழியைக் கற்றார்.

கோதைநாயகி பள்ளிக்கூடம் போகவில்லை. அதனால் அவருக்கு எழுதப் படிக்கவும் தெரியாது. ஆனால், வீட்டில் எப்போதும், திருவாய் மொழி, பாசுரங்கள் பாடிக்கொண்டிருப்பார். இதனால் அவருக்கு தமிழ்நடை சரளமாக வரத் தொடங்கியது. தொடக்கக் காலத்தில் சின்னஞ்சிறு குழந்தைகளுக்கு பழங்கதைகளைச் சொல்லி வந்தார். சிறுவயதிலேயே மற்றவர்கள் ரசிக்கும் அளவிற்கு கற்பனைக் கதைகளைக் கூறும் திறன் கோதைநாயகிக்கு இருந்தது. இதனைக் கண்ட அவரது கணவர் அவரிடம் காணப்பட்ட படைப்பாற்றலை ஊக்குவிக்கும் பொருட்டு அவரைப் பல நாடகங்களுக்கு அழைத்துச் சென்றார். நாடகங்களைப் பார்த்து ரசித்த கோதைநாயகிக்குத் தானே நாடகங்களை எழுதவேண்டும் என்ற ஆவல் ஏற்பட்டது.

சமூக மறுமலர்ச்சிக்கும், பெண்களின் முன்னேற்றத்துக்கும் ஏதாவது செய்ய வேண்டும் என்ற ஆர்வமும் அவருடைய கற்பனை வளமும் சேர்ந்து எழுத வேண்டும் என்ற ஆவலைத் தூண்டின. அவருக்கு ஓரளவு மட்டுமே எழுதத் தெரிந்ததால், இவர் கூறியதை அவரது தோழி பட்டம்மாள் எழுத, இந்திர மோகனா என்ற நாடகத்தை உருவாக்கினார். இந்நாடகத்தை **1924**ஆம் ஆண்டு நோபில் அச்சகத்தார் மூலம் நூலாக வெளியிட்டார். இந்நாடகத்தை இந்து, சுதேசமித்திரன், நியூ இந்தியா உள்ளிட்ட அக்கால இதழ்கள் பாராட்டி எழுதின. இந்நாடகத்தை பலர் கேட்டு வாங்கி நடித்தனர். இவ்வாறு தனது முதல் நூலுக்குக் கிடைத்த வெற்றி கோதைநாயகியை மேலும் எழுதத் தூண்டியது எனலாம். அதனைத் தொடர்ந்து ஒரு நாடகத்தையும் எழுதி முடித்தார். அதன் பிறகு பட்டம்மாளிடம் தமிழை எழுதவும் படிக்கவும் கற்கத் தொடங்கினார்.



கோதைநாயகி, நாடகம் எழுதுவதிலும், இயக்குவதிலும் வல்லவர். அவருடைய சமூக நாடகங்கள் பலமுறை மேடை ஏற்றப்பட்டுள்ளன. அவற்றில் அருணோதயம், வத்சகுமார், தயாநிதி என்ற நாடகங்கள் பலரது பாராட்டைப் பெற்றவை. இவ்வாறு, கோதைநாயகி இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழிலும் வல்லவராகத் திகழ்ந்தார். மேலும் இரு சிறுகதைத் தொகுதிகள், மூன்று நாடகங்கள், இரண்டு உரைநடை நூல்கள் ஆகியவை அவரின் இதர படைப்புகளாகும்.

முதல் நூல் தந்த ஊக்கத்தால் கோதைநாயகி வைதேகி என்ற புதினத்தை எழுதினார். இதனை வடுவூர் துரைசாமி ஐயங்கார் திருத்தம் செய்து கொடுத்ததுடன் தமது மனோரஞ்சனி இதழில் வெளியிட்டு ஊக்கம் தந்தார். அவரது அறிவுரையின் பேரில், **1925**ஆம் ஆண்டு ஆகத்து மாதம் வெளிவராமல் நின்று போயிருந்த ஜகன்மோகினி மாத இதழை விலை கொடுத்து வாங்கி அதே பெயரில் வெளியிடத் தொடங்கினார். அதில் வைதேகி புதினத்தைத் தொடர்கதையாக ஓர் ஆண்டு முழுக்க வெளியிட்டார் இதற்குப் பலர் பலத்த எதிர்ப்பு காட்டினர் என்றாலும், மக்களுக்கு விழிப்புணர்வூட்ட இதழ்கள் தாம் நல்ல வழி என்று இவ்விதழை நடத்துவதிலிருந்து பின்வாங்க மறுத்தார். பின்பு அவ்விதழ் கோதைநாயகி இறப்பதற்குச் சில ஆண்டுகள் முன்பு வரை *35* ஆண்டுகளாக வெளிவந்தது குறிப்பிடத்தக்கது.

**- தொடரும்**

# சதாவின் தர்பார்

# திணறும் திருப்பூர்

**யார் இந்த சதா?**

திருப்பூர் மாவட்டம், குன்னத்தூர் பேரூராட்சிக் குட்ப்பட்ட அம்மன்கோயில்பதி என்ற குக்கிராமத்தில் நாச்சிமுத்து நாடார் - ஈஸ்வரி தம்பதியரின் இளையமகனாக பிறந்தவன். ஆதியூரில் ஆரம்பக்கல்வியை தொடங்கிய சதா, சிக்கண்ணா ARTS காலேஜில் பாதியில் படிப்பை முடித்தவன்.

படிப்பில்லாதவனிடம் சரஸ்வதி நெருங்க மாட்டாள் என்பதுபோல, பயமில்லாதவனிடம் எமனும் நெருங்கமாட்டான் என்பதற்கு உதாரணமாக இந்த சதா எனும் இளைஞனை சொல்லலாம். கல்வி பயிலும் காலத்திலேயே கட்டப் பஞ்சாயத்தைத் தொடங்கியவன். அதிரடி அரசியலில் இறங்கிய பிறகு இன்று அது விஸ்வரூபம் எடுத்திருக்கிறது.

ஆரம்பத்தில் அரசியலை அறவே வெறுத்த சதா, தன் முதல் ஓட்டைக்கூட பதிவு செய்யவில்லை. இப்படி இருந்த சதா, பின்னாளில், தமிழக வாழ்வுரிமைக் கட்சி வேல்முருகனின் பேச்சாலும் செயலாலும் ஈர்க்கப்பட்டு, அரசியலில் ஈடுபட்டு கிளைச் செயலாளராக தொடங்கி அதிவிரைவில் திருப்பூர் மாவட்ட செயலாளராக உயர்ந்தவன். தூரத்தில் நின்று கையசைக்கும் வேல்முருகனை பார்த்து பிரமித்தவன்... நாளைடைவில் வேல்முருகனே அருகில் அழைத்து, கை கொடுத்து, கட்டியணைத்து, தட்டிக்கொடுக்கும் அளவிற்கு வளர்ந்தவன்.

கருமத்தம்பட்டி டோல்கேட்டை அடித்து நொறுக்கியபோது சதாவின் செயல்பாடு, அனைவராலும் வெகுவாக கவனிக்கப்பட்டது. "வஞ்சிக்கப்படும் தமிழ்நாடு" என்ற மாபெரும் பொதுக்கூட்டத்தை தலைமையேற்று, மகத்தான கூட்டத்தைக் கூட்டி மாவட்டத்தையே அதிரச்



செய்தபோது மாற்றுக்கட்சியினரே சதாவைக் கண்டு அஞ்சி நடுங்கினர். இந்தப் பொதுக் கூட்டம்தான் சதாவை வேல்முருகனின் நம்பிக்கைக் குரியவராக உருவெடுக்கக் காரணமாயிற்று.

ரியல் எஸ்டேட் தொழிலில் ஈடுபட்டு, கொஞ்சம் கொஞ்சமாய் உயர்ந்து, இன்று அதில் கொடிகட்டி பறக்கிறான் சதா.

2011 சட்டமன்ற தேர்தலில் போட்டியிட்டு 15 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வாக்குகளை பெற்ற சதா, இனப் பாகுபாடு காரணமாக கட்சியில் சிலரது சூழ்ச்சிகளைக் கண்டு வெறுத்து, கட்சியிலிருந்து விலகினாலும், இன்றும் தன் அரசியல் ஆசான் திரு. வேல்முருகனின் தொடர்பில் இருந்துகொண்டுதான் இருக்கிறான்.



விலகி வந்த சதா "சிவசக்தி மக்கள்சேனா" என்ற கட்சியை நண்பர்களின் துணைகொண்டு தொடங்க, இன்று அது தொண்டர்களின் படைகொண்டு வளர்ந்து வருகிறது.

சாதாரண மனிதனாகப் பிறந்து, சகாப்த இளைஞனாக வளர்ந்து வரும் சதாவை, தன் இனமானக் கட்சி, பனங்காட்டுப் படை அரவணைத்து, அனைத்து வகையிலும் ஆதரவாக இருப்பது, சதாவிற்கு தக்க சமயத்தில் பக்கபலமாய் அமைந்திருப்பதாகவே சொல்லலாம். ஹரிநாடார் அவர்களின் அன்பையும், ராக்கெட்ராஜா அவர்களின் பேரன்பையும் பெற்ற சதா, ஒருங்கிணைந்த திருப்பூர் மாவட்டச் செயலாளர் மற்றும் ஒருங்கிணைந்த கொங்கு மண்டல பொறுப்பாளர் என்று இரட்டைப் பதவியை கிரீடமாய் எண்ணி செயல்படும் சதாவை மேலிடம் பாராட்டத்தான் செய்கிறது.

தன்னை நேசிக்கும் மக்களை தெய்வமாக எண்ணும் சதா, தவறு செய்பவர்களை தண்டிக்கத் தயங்குவதில்லை. சதாவுக்காக தன் உயிரையே கொடுக்கத் துணிந்த ஒரு கூட்டம், ஒளிவட்டம்போல் எப்போதும் அவனைச் சுற்றியே இயங்கி வருகிறது.

கட்டிடம் கட்டுவதிலிருந்து, தொழில் தொடங்கி தொடர்ந்து நடைபெற, யாருக்குத் தருகிறார்களோ இல்லையோ, சதாவுக்கு கட்டிங்க் போய்விடுவது வழக்கமாகிவிட்டது. இல்லையென்றால் கட்டியவீடு தரைமட்ட மாகும். தொடங்கிய தொழிலை தொடர முடியாமல் போகும்.

குடிசைத் தொழில் செய்பவர் முதல் கோடியில் புரளும் தொழிலதிபர்கள் வரை அனைவருக்கும் அன்பாய் பைனான்ஸ் கொடுத்து, அதிரடியாய் வசூல் செய்வதில் சதாவின் தடாலடி எவரும் செய்யாதது.

தாராபுரம் ரோடு பெருந்தொழுவின் வடக்கே நான்கு கிலோமீட்டர் தொலைவில் 25 ஏக்கரில் ஈ, எறும்புகூட உள்ளே நுழைய யோசிக்கும்படியான பாதுகாப்போடு அமர்ந்துள்ள தோட்டமே சதாவின் தர்பார் நடக்கும் இடம்.



இங்கே, கைக்கூலி முதல் கரைவேட்டி வரை, சதாவின் தொண்டர் படையால் இழுத்து வரப்படுகிறார்கள். அவர்கள் வெளியேறும்போது வெளுக்கப்பட்டு ரத்தக்கறையோடு அனுப்பப்படுகிறார்கள்.

ஏய்த்துப் பிழைப்பவர்களிடம் வாங்கிக் குவிக்கும் சதா, ஏழை எளியவர்க்கு வாரிக் கொடுக்கவும் தயங்குவதில்லை. தனக்கென ஒரு தனி ராஜபாட்டை அமைத்து, சிம்மசொப்பனமாய் திகழும் சதாவின் மேல் இதுவரை எந்த வழக்கும் இல்லை என்பதே நிதர்சனமான உண்மை.

**- நமது நிருபர்**

# வள்ளலார் அருளிய

# காயகல்பம்

Dr. K. ராஜமாணிக்கம்



### அரிய மூலிகை அவுரி

நாம் சாப்பிடும் மருந்து மாத்திரைகளில் இருக்கும் உலோகங்களை உடல் எடுத்துகொள்ள இயலாத போது Inflammatory Reaction மூலமாக நமக்கு உணர்த்தும் அதன் அறிகுறிகள் உடல் சூடாகுதல், சிவத்தல், வீங்குதல், அரித்தல் போன்றவை. நாம் அறிந்த விடயங்கள் தான். நார்மலாக இல்லாமல் அதாவது உடல் செல்கள் தீவிரமாக அதனுடன் வினைபுரிந்து சற்று மாறி இருக்கும் அதனால் உடல் செல்களுக்கு ஆச்சிஜனை ஒழுங்காக கடத்த இயலாமல் pro occident ஆக மாறுபாடு அடைந்து சிறுநீரகம், மண்ணீரல் பழுதாகி விடுகிறது. இந்த உலோகங்கள் உடல் செல்களில் வினைபுரிந்து புரதம் மெம்ரின் போன்றவை சிதைய ஆரம்பிக்கிறது தொடர்ந்து நடைபெறும் போது சங்கிலி சிதைவு ஏற்பட்டு உடல் அவயங்கள் செயல் இழக்க ஆரம்பிக்கிறது உதாரணமாக சர்க்கரை நோய்க்கு தொடர்ந்து எடுத்து கொள்ளும் மருந்து மாத்திரைகளால் செயல் இழந்து விடுகிறது என்பது சிறுநீரகம். அவ்வாறே மண்ணீரல் தான் வெளியே இருந்து வரும் தேவையற்ற மாசுக்களை அழித்து வெளி யேற்றம் செய்கிறது நிணநீர்சுரப்பிகள் மூலமாக Spleen cells தான் உடலில் நோய் எதிர்ப்பு சக்தியை உருவாகக்கூடியது இது பாதிப்படைவதை தடுப்பது அவுரியில் இருக்கும் எத்தனால் கலந்த திரவம் தான் உடலில் இருக்கும் மாசுக்களை வெளியேற்றி மண்ணீரலை பாதுகாக்கிறது. அதன் மூலமாக உடலில் நோய் எதிர்ப்பு சக்தி பெருகிறது. இத்தகைய மருந்துகளினால் ஏற்படும் தீய விளைவுகளை அவுரி செடியில் இருந்து எடுக்கப்படும் மருந்து சரி செய்கிறது என்று ஆங்கில மருத்துவம் கூட ஒப்பு கொண்டுள்ளதை நோக்கும் போது நமது தமிழ் மருத்துவம் அவுரி கற்பத்தை பயன்படுத்தி பல உடல்நல குறைபாடுகளை தீர்த்து கொண்டு உள்ளதையும்.

காலங்காலமாக உடலில் உள்ள விசமுறிவுக்கு அவுரி இலை கசாயத்தை பயன்படுத்தி குணபடுத்துவதை அனுபவத்தில் நாம் அறிந்த உண்மையும் பெருமையும் கூட. அறிவார்ந்த சமூகமான நாம் அவுரியை பசுந்தாள் உரமாக பயன்படுத்தி விச செடிகளினால் ஏற்படும் விசங்களை போக்கி மண்ணை வளபடுத்தும் மாண்பையும் மரபையும் கருத்தில் கொள்வோம் இங்கே. "சந்தி பதின் முன்னர் சத்தொடித்த வாதமுதலுன்று விசகடியு மோடுங்கான் -மின்னுங் கவுரிநிற முண்டாகுங் காசினியுளேநல்லவுரியிலையா லறி" என்பது அவுரி பற்றிய சித்தர் பாடல்.

அவுரி இலையால் 13வகையான சந்திநோய்களும், கீல்வாதமும், பாம்புவிசமும் நீங்கும் இதனை உண்பவர்கள் தேகம் பொண் நிறமாக மாறும் என்பது மேற்கண்ட பாடல் கூறுகிறது.

**அவுரி கற்பம் செய்முறை:** அவுரி+கரிசலாங்கண்ணி+குப்பைமேனி+பொண்ணாங்கண்ணி+கொட்டை கரந்தை+செருபடை+மஞ்சள் போன்றவற்றை சம அளவு கலந்து இடித்து பொடி செய்து காலை மாலை ஒரு தேக்கரண்டி அளவு தேனில் கலந்து பயன்படுத்தி வந்தால் தேகம் பொன் நிறமாக மாறுமாம். இது பெண்களுக்கான உதிரகட்டு எனப்படும் மாதவிடாய் கோளாறுகளை சரி செய்யும் மூட்டு வாதமும் குணமாக கூடும்.

# மருத்துவப் பகுதி

*1.* இரத்தத்தில் சர்க்கரையின் அளவை கட்டுபடுத்த அவுரிஇலை சாற்றில் வெந்தயத்தை ஊர வைத்து முளைப்பு கட்டிய பின் நிழலில் உலர்த்தி பொடி செய்து காலையில் ஐந்து கிராம் மாலையில் ஐந்து கிராம் சாப்பிட்டு வர சிறப்பான முன்னேற்றம் கிட்டும் இது அனுபவ உண்மை.

*2.* அவரி இலை+கரிசலாங்கண்ணி+காட்டு கறிவேப்பிலை மூன்றையும் சம அளவு கலந்து தினமும் மூன்று வேலை உட்கொள்ள தலைமுடி கருகருவென நன்கு வளரும் இரத்தத்தில் சிவப்பு அணுக்களின் எண்ணிக்கை வெகுவாக உயரும்.



*3.* அவுரி கரிசாலை இலையை அரைத்துப் நெல்லிக்காய் சாறு கலந்து தலைக்கு தேய்த்து குளிக்க இளநரை மாறும் என ஏடுகளில் குறிப்புகள் உள்ளது. நீலி பிரங்காதி தைலம் எனப்படுவது, **நீலி-அவுரி, பிரிங்கம்-கரிசாலை, ஆம்லா-நெல்லிக்காய்** இதை கடையில் வாங்குவதை விட நீங்களே செய்து பயன்படுத்துவது சிறப்பாக இருக்கும் பணமும் மீதமாகும்.

*4.* பாம்பு கடிப்பட்டவர்களுக்கு அவுரி இலை-சிறு தும்பைஇலை இரண்டும் சமளவு கலந்து இதன் எடைக்கு இருபது பங்கில் ஒரு பங்கு மிளகு சேர்த்து அரைத்து மாத்திரையாக்கி நிழலில் உலர்த்தி பாதுகாத்து கொள்ளவும். மணிக்கு ஒருமுறை இரண்டு மாத்திரை கொடுத்து சூடு தண்ணீர் குடித்து வர மூன்று மணி நேரத்தில் விசம் இறங்கி விடும் இது மிகவும் சிறந்த அனுபவ முறை.

*5.* இரத்தத்தில் உள்ள அசுத்தம் காரணமாக உருவாகும் தோல் நோய்கள் குணமாக மிளகு அவுரிஇலை தலா ஐந்து வீதம் அரைத்து சாப்பிட்டால் நன்றாக குணமாகும்.

*6.* அவுரி இலைக்கு மலத்தை இழகசெய்யும் தன்மை உடையது அதற்கு காரணம் இதில் உள்ள ஷிமீஸீஷீநீவீபீமீ என்னும் மூலப்பொருள் காரணமாகும் அதனால் தான் சித்த மருத்துவத்தில் இதனை மலமிளக்கியாக பயன்படுத்தி இருக்கிறார்கள்.

*7.* அவுரி இலை வாதநாரயணன் இலை பூண்டு மிளகு அனைத்தையும் சம அளவு எடுத்து அரைத்து தினமும் சாப்பிட்டு வந்தால் மூட்டுவலி மூட்டு வாதம் போக்கும் மூட்டுகளில் உள்ள வீக்கமும் குறையும்.

*8.* அவுரிஇலை+நிலவேம்பு+சோம்பு மூன்றையும் சம அளவு கலந்து வெறும் வயிற்றில் சாப்பிட வாத காய்ச்சல் குணமாகும்.

*9.* பெண்களுக்கு ஏற்படும் வெள்ளைபடுதல் முற்றிலும் குணமாக அவுரி வேர்+யானை நெருஞ்சில் இலைகளை சம அளவு எடுத்து அறைத்து எலுமிச்சை பழம் அளவு மோரில் கலந்து காலையில் வெறும் வயிற்றில் குடித்து வரவும். இதன் மூலமாக வயிற்றில் உள்ள புண்களும் சரியாகும் வாய் நாற்றம் தீரும் .

*10.* அவுரி இலையை நிழலில் உலர்த்தி காலையில் வெறும் வயிற்றில் சாப்பிட தேகம் பொன் நிறமாக மாறும் என ஏடுகளில் குறிப்புகள் உள்ளன கவனிக்கவும். கற்பம் செந்தூரம் பாசானங்களை மருந்தாக்க செய்முறைகளின் போது மருத்துவர்கள் அதை சாப்பிட்டு விட்டு மருந்து சரியான பக்குவத்திற்கு வரவில்லை என்ற போது உடலில் ஓர்வித ஒவ்வாமை தன்மை ஏற்படும் அதற்கு முறிவு மருந்து இந்த அவுரி இலை சாறு தான்.

அவுரி ஆங்கில மருத்து மாத்திரைகலால் உடலில் சேர்ந்துள்ள விசஙகளை நீக்குவது மட்டுமன்றி உடலின் நாடி நடை, ஆரோகியத்தை மேம்படுத்தும் சிறந்த மருந்து. அவசியம் பயன்படுத்த முயலுங்கள் செலவில்லாத எளிய வைத்தியம்.

**- தொடரும்**

# பத்திரிகை தகவல் அலுவலக தென்மண்டல
## தலைமை இயக்குநராக திரு.எஸ்.வெங்கடேஸ்வர் பொறுப்பேற்றார்



மத்திய அரசின் தகவல் ஒலிபரப்பு அமைச்சகத்தின் பத்திரிகை தகவல் அலுவலக தென்மண்டல தலைமை இயக்குநராக திரு.எஸ்.வெங்கடேஸ்வர் 20.01.2020 அன்று சென்னையில் பொறுப்பேற்றார்.

பத்திரிகை தகவல் அலுவலகம், மண்டல மக்கள் தொடர்பு அலுவலகம் உட்பட தென்னிந்தியாவில் உள்ள அனைத்து ஊடகப் பிரிவுகளுக்கும் அவர் தலைமை வகிப்பார். மேலும் இந்திய பத்திரிகை பதிவாளர் அலுவலகத்தின் கூடுதல் பத்திரிகை பதிவாளராகவும் இருப்பார்.

1989 ஆம் ஆண்டின் இந்திய தகவல் சேவை (ஐஐஎஸ்) அதிகாரியான இவர், தமிழ்நாடு, கர்நாடகா, கேரளா, ஆந்திரப்பிரதேசம், தெலங்கானா, லட்சத்தீவு, அந்தமான்-நிக்கோபார், புதுச்சேரி ஆகிய பகுதிகளுக்கு பொறுப்பு வகிப்பார்.

இதற்கு முன்பாக திரு.வெங்கடேஸ்வர் தெலங்கானா மண்டல பத்திரிகை தகவல் அலுவலக தலைமை இயக்குனராக இருந்தார். தூர்தர்ஷன், அகில இந்திய வானொலி, பத்திரிகை தகவல் அலுவலகம், களவிளம்பர இயக்குநரகம் ஆகியவற்றில் பல்வேறு உயர் பதவிகளை இவர் வகித்துள்ளார். திரு.வெங்கடேஸ்வர், ஆந்திரப்பிரதேச அரசின் செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறை ஆணையராகவும் பணியாற்றியுள்ளார்.

புதிதாக பொறுப்பேற்றுள்ள திரு.எஸ். வெங்கடேஸ்வர் அவர்களின் பணி சிறக்க, மக்கள் விசாரணை வாழ்த்துகிறது.

– **ஆசிரியர்**

# தேசிய வாக்காளர் தினத்தையொட்டி
## மக்களுக்குப் பிரதமர் வாழ்த்து தெரிவித்துள்ளார்

தேசிய வாக்காளர் தினத்தையொட்டி பிரதமர் திரு நரேந்திர மோடி மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

“தேசிய வாக்காளர் தினத்தன்று வாழ்த்துக்கள். நமது வாக்காளர் சேர்ப்பு நடைமுறையைக் கூடுதல் வேகத்தோடும், அனைவரும் இணையும் வகையிலும், பல முயற்சிகளை மேற்கொள்வதற்காக இந்தியத் தேர்தல் ஆணையத்திற்கு நாம் நன்றி சொல்கிறோம். வாக்காளர் விழிப்புணர்வையும், வாக்களிப்பையும் அதிகரிப்பதற்குப் பணி செய்ய இந்த நாள் நமக்கு ஊக்கமளிக்கட்டும். இதுவே நமது ஜனநாயகத்தை வலுவாக்கும்” என்று பிரதமர் கூறியுள்ளார்.

– S. **மோகன்**

# சொட்டுநீர் பாசனத்தில் தமிழகம் முதலிடம்

சொட்டுநீர் பாசனத் திட்டத்தை செயல்படுத்தியதில் நாட்டிலேயே தமிழகம் முதலிடம் பெற்றுள்ளது. சொட்டுநீர் பாசனத்தால் தரமான விளைபொருள் கிடைப்பதால், விவசாயிகளுக்கு விளைச்சலுடன், வருமானமும் அதிகரித்திருப்பது தெரியவந்துள்ளது. தமிழகத்தில் காவிரி உள்ளிட்ட ஆறுகள் இருந்தாலும் பெரும்பாலான ஏக்கர் நிலங்கள் திறந்தவெளி கிணறுகள், ஆழ்குழாய் கிணறுகள் மூலமாகவே பாசன வசதி பெறுகின்றன. போதிய மழைப் பொழிவு இல்லாதது, அதிக வெயில் உள்ளிட்ட காரணங்களால் நீர் ஆதாரங்களின் அளவு குறைந்து வருகிறது.

இதனால், தண்ணீர் சிக்கனம் அவசியமாகி வருகிறது. எனவே, சொட்டுநீர் பாசனத்துக்கு மத்திய, மாநில அரசுகள் முக்கியத்துவம் அளித்து வருகின்றன. விவசாயிகளுக்கு அதற்கான உதவிகள், மானியம் வழங்கப்படுகின்றன. 5 ஏக்கர் வரை வைத்திருக்கும் சிறு, குறு விவசாயிகளுக்கு 100 சதவீதம் மானியமும், இதர விவசாயிகளுக்கு 75 சதவீதம் மானியமும் வழங்கப்படுகிறது. சிறு, குறு விவசாயிகளுக்கு சொட்டுநீர் பாசனத்துக்காக ஆழ்குழாய் கிணறு அமைக்க ரூ.25 ஆயிரம், குழாய்களுக்கு ரூ.10 ஆயிரம், தொட்டிகள் அமைக்க ரூ.40 ஆயிரம் மானியமாக வழங்கப்படுகிறது. நெல், கரும்பு, வாழை, தென்னை, காய்கறிகள், மலர்கள் சாகுபடிக்கு அதிக அளவில் சொட்டு நீர்ப் பாசனம் பயன்படுத்தப்படுகிறது.

இதுகுறித்து வேளாண் துறை உயர் அதிகாரிகள் கூறியதாவது: சொட்டுநீர் பாசனத்துக்காக 2019-20 ஆண்டில் மத்திய, மாநில அரசுகள் ரூ.1,370 கோடி ஒதுக்கின. இதில், இதுவரை ரூ.758 கோடியில் 1.58 லட்சம் ஹெக்டேரில் சொட்டுநீர் பாசன வசதி செய்து தரப்பட்டுள்ளது. இத்திட்டத்தை செயல் படுத்தியதில், நாட்டிலேயே தமிழகம் முதலிடம் பெற்றுள்ளது. அடுத்ததாக, கர்நாடகாவில் 1.25




லட்சம் ஹெக்டேர், குஜராத்தில் 77,858 ஹெக்டேர், ஆந்திராவில் 52,027 ஹெக்டேரில் சொட்டுநீர் பாசன வசதி செய்து தரப்பட்டுள்ளது. தமிழகத்தில் இதுவரை சொட்டுநீர் பாசனத்தால் 60 சதவீதம் தண்ணீர் சிக்கனமாக பயன்படுத்தப்பட்டுள்ளது. வரும் மார்ச் மாதத்துக்குள் மேலும் 1 லட்சம் ஹெக்டேரில் சொட்டுநீர் பாசன வசதி செய்து தரப்படும்.

கடந்த சில ஆண்டுகளாக போதிய மழைப் பொழிவு இல்லை. நிலத்தடி நீர்மட்டமும் வெகுவாக குறைந்துவிட்டது. இருப்பினும் சொட்டுநீர் பாசனம் மூலம் சாகுபடி பரப்பு 40 சதவீதமும் விவசாய விளைபொருள் உற்பத்தி திறன் 20 சதவீதம் அதிகரித்துள்ளது. தவிர, விளைபொருளின் தரமும் அதிகரிக்கிறது. உதாரணத்துக்கு, சொட்டுநீர் பாசனத்தில் உற்பத்தி செய்யப்படும் கரும்புகளின் உயரம், பருமன் ஒரேமாதிரி, அதிக பிழிதிறனுடன் தரமாக இருப்பதால், விவசாயிகளுக்கு போதிய விலையும் கிடைக்கிறது. சொட்டுநீர் பாசனத்தால் கிருஷ்ணகிரி, தருமபுரி, சேலம், ஈரோடு விவசாயிகளின் விளைச்சலுடன், வருவாயும் அதிகரித்திருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

சொட்டுநீர் பாசனத்தை ஊக்குவிக்க, கரும்பு விவசாயிகளுக்கான கூடுதல் செலவினம் ரூ.68.35 கோடியை தமிழக அரசே ஏற்றுள்ளது. சொட்டுநீர் பாசனத் திட்டத்தை சிறப்பாக செயல்படுத்தியதற்காக 2020-21 ஆண்டில் இத்திட்டத்துக்கு ரூ.1,600 கோடி கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது விவசாயிகளிடம் உற்சாகத்தை ஏற்படுத் தியுள்ளது. இவ்வாறு அதிகாரி கள் கூறினர்.

**- S. சுப்ரமணியன்**



# சிந்தனை முத்துக்கள்














குரங்கு சாவதற்கு ஒரே ஒரு புண் போதும் அதை நோண்டி நோண்டிப் பெரிதாக்கித் தன்னை அழித்துக் கொள்ளும் முட்டாள் சாவதற்கு ஒரு சிறிய பிரச்சனை போதும் அதை நோண்டி நோண்டிப் பெரிதாக்கி தன்னை மாய்த்துக் கொள்வான். வெள்ளத்து அனைய இடும்பை அறிவுடையான் உள்ளத்தின் உள்ளக் கெடும். குறள் 622 வெள்ளம் போல் அளவற்றதாய் வரும் துன்பங்களும் அறிவுடையவன் தன் உள்ளத்தினால் அத்துன்பங்களின் இயல்பை நினைத்த அளவில் கெடும்.







வைரஸ் பாதிக்கபட்டவர்களுககாக 10 நாளில் மருத்துவமனை கட்ட திட்டம் - சீனா

ம் எங்க ஊர்லலாம் காங்ரெட் போட்டு முட்டு பிரிக்கவே 3 வாரம் ஆகும்





**நமது சமுதாயம் இப்போது இருக்கும் தாழ்ந்த நிலைமைக்கு மதம் காரணம் அல்ல. மதத்தை முறையாகப் பின்பற்றாமல் போனதுதான் சமுதாயத்தின் வீழ்ச்சிக்குக் காரணம் என்று நான் சொல்கிறேன்.**

**– விவேகானந்தர்**







அம்மி மிதிச்சு
அருந்ததி பாத்து
எல்லாரும் சேர்ந்து பண்றது
ARRANGED MARRIAGE

மம்மி மிதிச்சு
டாடி அடிச்சு
தனியா போய் பண்றது
LOVE MARRIAGE
















பிய்யாத தோசை
வேணும்னு அவள்ட்ட
கேட்டதும்..!அவளும்
ஆசையா போட்டு தந்து..!

இப்ப பிய்க்காம
தின்னுனு
*கரண்டியோட பக்கத்தில
நிப்பா பாருங்க அவ
தாங்க..?
பொண்டாட்டி..😋😊

இப்ப என்னடா
பண்ணலாம்னு
தோசையவே வெறிக்க
வெறிக்க பாத்துட்டு
இருப்பான் பாருங்க
அவன் தான் the great
புருஷன்..! 🤧😫😊😀😜

# தமிழக வேளாண்மைத் துறைக்கு புதிய கட்டிடங்கள்

## முதல்வர் பழனிசாமி திறந்து வைத்தார்



த மிழகத்தில் பல்வேறு மாவட்டங்களில் புதிதாக கட்டப்பட்டுள்ள ரூ.99 கோடியே 83 லட்சம் மதிப்பிலான வேளாண்மைத் துறை கட்டிடங்களை முதல்வர் பழனிசாமி திறந்துவைத்தார்.

இதுதொடர்பாக அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பு:

தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகத்தின்கீழ் புதுக்கோட்டை மாவட்டம் குடுமியான்மலையில் இயங்கும் வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் ரூ.10 கோடியில் கூடுதல் விரிவுரை அரங்கம் மற்றும் ஆய்வகங்கள் கட்டப்பட்டுள்ளன.

மேலும், ரூ.89 கோடியே 83 லட்சத்தில் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் உள்ள வேளாண் கல்லூரிகளில் பயிற்சியாளர் விடுதி, ஆசிரியர்மையம், நூலகக்கட்டிடம், வேளாண் துறை சார்ந்த குளிர்பதன கிடங்கு, விதை சேமிப்பு கிடங்கு, சிப்பம் கட்டும் கூடம், விவசாயிகளுக்கான சேவைமையம் உள்ளிட்ட கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளன.

மொத்தம் ரூ.99 கோடியே 83 லட்சத்தில் கட்டப்பட்டுள்ள இந்த புதிய கட்டிடங்களின் திறப்பு விழா, தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது. அதில் பங்கேற்ற முதல்வர் பழனிசாமி, காணொலி காட்சி மூலம் திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் சுகாதாரத் துறை அமைச்சர் சி.விஜயபாஸ்கர், வேளாண் துறை அமைச்சர் ஆர்.துரைக்கண்ணு, தலைமைச் செயலர் க.சண்முகம், வேளாண் உற்பத்தி ஆணையர் ககன்தீப் சிங் பேடி,



வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிக ஆணையர் எஸ்.ஜே.சிரு, வேளாண் துறை இயக்குநர் வி.தட்சிணாமூர்த்தி, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் ந.சுப்பையன், தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக துணைவேந்தர் என்.குமார், ராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் கொ.வீரராகவ ராவ் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

**மாணவர் விடுதி கட்டிடங்கள்:** சென்னை லேடி வெலிங்டன்வளாகத்தில் மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலக் கல்லூரி மாணவியருக்காக கட்டப்பட்டுள்ள 2 விடுதிக் கட்டிடங்களை முதல்வர் பழனிசாமி காணொலி காட்சி மூலம் திறந்துவைத்தார்.

மேலும், அரியலூர் மாவட்டம் சுண்டக்குடி, கோவை மாவட்டம் நாயக்கன்பாளையம், புதுக்கோட்டை மாவட்டம் கீரமங்கலம், ராமநாதபுரம் மாவட்டம் திருவரங்கம், சிவகங்கை மாவட்டம் இடையமேலூர், வேதியரேந்தல் மற்றும்தமராக்கி ஆகிய இடங்களில் கட்டப்பட்டுள்ள பிற்படுத்தப்பட்டோர் நலப் பள்ளி மாணவர்களுக்கான விடுதிக் கட்டிடங்களையும் முதல்வர் திறந்து வைத்தார்.

தஞ்சாவூர் மாவட்டம் திருப்பனந்தாளில் பிற்படுத்தப்பட்டோர் நலப் பள்ளி மாணவியர் விடுதிக் கட்டிடம், ராமநாதபுரம் மாவட்டம் கீழத்தூவல் மற்றும் ஆர்.எஸ். மங்கலம் ஆகிய இடங்களில் மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலப் பள்ளி மாணவியருக்கான 2 விடுதிக் கட்டிடங்கள் என மொத்தம் ரூ.12 கோடியே 48 லட்சத்து 44 ஆயிரம் மதிப்பீட்டில் 12 கட்டிடங்களை முதல்வர் திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் அமைச்சர்கள் டி.ஜெயக்குமார், எஸ். வளர்மதி, தலைமைச் செயலர் க.சண்முகம், பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப் பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை முதன்மைச் செயலர் ஆ.கார்த்திக், பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநர் சி.காமராஜ், சிறுபான்மையினர் நல இயக்குநர் சீ.சுரேஷ் குமார் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

**- முனைவர் ஆ. மவுரியன்**

# இரண்டாம் மருத்துவ ஆலோசனை அவசியமா?



அண்மைக் காலமாக நோயாளிகளிடம் 'செகண்ட் ஒப்பீனியன்' என்னும் சொல்லாடல் பிரபலமாகி வருகிறது. எந்தவொரு உடல்நலப் பிரச்சினைக்கும் முதலில் 'குடும்ப மருத்துவரிடம்' சிகிச்சை பெற்றுக்கொள்வதற்கு மாறாக 'சிறப்பு மருத்துவரிடம்' நேரடியாகச் சிகிச்சை பெற்றுக்கொள்ளும் வழிமுறைக்கு மக்கள் மாறிய பின்னர், பல நேரங்களில் ஒரு மருத்துவர் கூறும் ஆலோசனையை அப்படியே அவர்கள் ஏற்றுக்கொள்வதில்லை; ஊடகங்கள் வழி அவர்கள் தெரிந்துவைத்திருப்பதையும் கூகுளில் தேடித் தெரிந்துகொண்டதையும் ஒப்பிட்டுப் பார்க்கின்றனர். சந்தேகமோ குழப்பமோ ஏற்படும்போது முதலில் தெரிவிக்கப்பட்ட ஆலோசனை சரியா தவறா என்பதைத் தெரிந்துகொள்ள மற்றொரு மருத்துவரிடம் கருத்துக் கேட்க விரும்புகின்றனர்.

**இப்படி 'இரண்டாம் மருத்துவ ஆலோசனை' கேட்க வேண்டியது அவசியமா?:** 'மருத்துவம் வணிகமாகி வருகிறது; மருத்துவத்தில் கவனக்குறைவு' போன்ற புகார்கள் அதிகரித்துவரும் காலம் இது. அரசால் அங்கீகரிக்கப்படாத ஆய்வுக்கூடங்களும் மருத்துவமனைகளும் நாட்டில் அதிகமுள்ளன. போலி மருத்துவர்கள் கிராமங்களில் மட்டுமல்லாமல் நகரங்களிலும் சிகிச்சை அளிக்கிறார்கள். தனியார் மருத்துவமனை, அரசு மருத்துவமனை என வேறுபாடு இல்லாமல் மருத்துவப் பரிசோதனை முடிவுகளும் சிகிச்சை முறைகளில் மனிதத் தவறுகளும் அதிகரித்து வருகின்றன. இம்மாதிரியான சூழலில் இரண்டாம் மருத்துவ ஆலோசனை கேட்க வேண்டியது அவசியமே!

அதேநேரம் சளி, இருமல், காய்ச்சல், வாந்தி, வயிற்றுப்போக்கு போன்ற சாதாரணப் பிரச்சினைகளுக்கு வெளிப்படையாக விளக்கம் கொடுத்து, மருத்துவ நெறிகளின்படி சிகிச்சை அளிக்கும் ஒரு பொதுநல மருத்துவரிடமோ (எம்.பி.பி.எஸ்.), பொது மருத்துவரிடமோ (எம்.டி.) சிகிச்சை பெறும்போது இரண்டாம் ஆலோசனை தேவைப்படாது. வித்தியாசமான, குழப்பமான, கடுமையான சிக்கல் கொண்ட நோய்களுக்கு சிகிச்சை எடுக்கும்போது நோய் நீடிக்குமானால் அல்லது அறுவை சிகிச்சை தேவைப்படுமானால் சிறப்பு மருத்துவரிடம் இரண்டாம் மருத்துவ ஆலோசனை கேட்பதற்குப் பயனாளிக்கு உரிமை உள்ளது.

**இப்படியான இரண்டாம் மருத்துவ ஆலோசனை யாருக்குத் தேவை?:** நீடிக்கும் காசநோய், புற்றுநோய், எய்ட்ஸ் நோய், மாரடைப்பு போன்ற இதயம் தொடர்பான நோய்கள், நாட்பட்ட சுவாசத்தடை போன்ற சுவாச நோய்கள், வலிப்பு நோய் உள்ளிட்ட மூளை நரம்பு நோய்கள், மூளையில் கட்டி, ரத்த அடைப்பு, ரத்தக்குழாய் வெடிப்பு, ரத்த உறைவு, கட்டுப்படாத உயர் ரத்த அழுத்தம், கட்டுப்படாத நீரிழிவு, அவற்றால் ஏற்படும் இதயம், மூளை, கண், நரம்பு, சிறுநீரகம் போன்ற உறுப்புப் பிரச்சினைகள், எலும்பு / தசை நோய்கள், ஹார்மோன் பிரச்சினைகள், பிரசவத்தில் சிக்கல்கள், கருப்பை நோய்கள், நீண்ட காலம் சிகிச்சை தேவைப்படும் குழந்தைகள்/பெண்கள்/பெரியவர்களின் நோய்கள், பிறவி ஊன நோய்கள், நாட்பட்ட மனநோய்கள், மது அடிமை போன்றவற்றுக்கு முதலில் ஒரு மருத்துவரிடம் சிகிச்சை பெறும்போது அதில் திருப்தி இல்லை என்றால் இரண்டாம் மருத்துவ ஆலோசனை கேட்டுக்கொண்டு சிகிச்சை பெறுவது நல்லது.

**இரண்டாம் மருத்துவ ஆலோசனை எப்போது தேவை?:** மருத்துவர்கள் அறுவை சிகிச்சையைப் பரிந்துரைக்கும்போது, உறுப்பு மாற்று சிகிச்சை தேவைப்படும்போது, உயிருக்கு ஆபத்தான நோய்கள் தாக்கும்போது, 'இந்த நோயைச் சரி செய்ய முடியாது; சிகிச்சை தேவையில்லை' என்று கூறும்போது, 'நிரந்தரத் தீர்வு இல்லை; நோய் நீடிக்கவே செய்யும்' என்னும்போது, தொடர்ந்து



மாத்திரை, மருந்துகளைச் சாப்பிட வேண்டிய நிலைமை ஏற்படும்போது, வித்தியாசமான சிகிச்சைக்கோ நவீன சிகிச்சைக்கோ பரிந்துரை செய்யப்படும்போது, அதிக செலவு பிடிக்கும் நோய் என்று சொல்லும்போது, மாற்று மருத்துவத்துக்கு மாறும்போது, மருத்துவரீதியாகக் குழப்பங்கள் ஏற்படும்போதுஞ் இப்படிப் பல நேரங்களில் இரண்டாம் மருத்துவ ஆலோசனையைக் கேட்டுக்கொள்ளலாம்.

இவை தவிர பயனாளிக்கு இதயநோய், புற்றுநோய், எய்ட்ஸ் நோய் போன்றவை இருப்பதைச் சொன்னதுமே அவருக்கு மனத்துக்குள் அச்சம் படர ஆரம்பிக்கும்; மன அழுத்தம் ஏற்படும்; எதிர்காலம் குறித்த பயம் வந்து சேரும். அப்போது பயனாளி தனக்கு சிகிச்சை எடுத்தும் பலனில்லை; அதனால் சிகிச்சை தேவையில்லை என்ற முடிவுக்கு வர வாய்ப்புண்டு. இன்னும் சொல்லப்போனால் சிலர் தற்கொலை எண்ணத்துக்கும் ஆட்படுவதுண்டு. அம்மாதிரி நேரத்தில் அந்த நோய் குறித்த சிறப்பு மருத்துவரிடம் இரண்டாம் மருத்துவ ஆலோசனையைக் கேட்டுக்கொள்ளலாம்.

இன்றைய நவீன வாழ்வியல் முறைகளால் நாளுக்கு நாள் புதுவித நோய்கள் வருவது ஒருபுறமிருக்க, நவீன அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சியால் ஆபத்தான நோய்களையும் எளிதாக எதிர்கொள்ள உதவும் நவீனப் பரிசோதனை முறைகளும் சிகிச்சைகளும் வந்துகொண்டே இருக்கின்றன. எனவே, பொது மருத்துவர்கள் உடனுக்குடன் அறிந்திராத அல்லது பயன்படுத்த முடியாத புதுவித சிகிச்சை முறைகளைச் சிறப்பு மருத்துவர்கள் பயன்படுத்தலாம். அந்த வழியில் பயனாளிக்குப் பலன் கிடைக்கலாம். அந்த மாதிரி நேரங்களில் இரண்டாம் மருத்துவ ஆலோசனையைக் கேட்டுக்கொள்வது பலனளிக்கும்.

**இரண்டாம் மருத்துவ ஆலோசனையை யாரிடம் பெறுவது நல்லது?:** பயனாளிக்கு ஏற்பட்டிருக்கும் பிரச்சினை தொடர்பான சிறப்பு மருத்துவரிடம் (டி.எம்/எம்.சி.ஹெச்) இரண்டாம் மருத்துவ ஆலோசனை கேட்பது நல்லது. திறன் கொண்ட சரியான மருத்துவரைத் தேர்வுசெய்ய வேண்டியது மிக முக்கியம். அவர் அறம் சார்ந்த மருத்துவராகவும் அனுபவம் மிகுந்தவராகவும் இருப்பின் இன்னும் நல்லது. பயனாளியுடன் பேசுவதற்கு அதிக நேரம் ஒதுக்கும் மருத்துவர் என்றால் மிக மிக நல்லது. அடுத்து, ஒரு நோய்க்கான சிகிச்சை பல வழிகளில் தரப்படலாம். நவீன சிகிச்சைகள் வந்திருக்கலாம். அவற்றை முழுவதுமாகத் தெரிந்துகொண்டிருக்கும் மருத்துவரால்தான் காலத்துக்கு ஏற்ற சரியான சிகிச்சையைத் தர முடியும். இம்மாதிரியான மருத்துவர்களிடம் இரண்டாம் மருத்துவ ஆலோசனையைக் கேட்டுக்கொள்ளலாம்.

**இரண்டாம் மருத்துவ ஆலோ சனையை எப்படிப் பெறுவது?:** குறிப்பிட்ட நோய்ப்பிரிவு சார்ந்த சிறப்பு மருத்துவரிடம் இரண்டாம் மருத்துவ ஆலோசனையைக் கேட்க வேண்டும். சரியான சிறப்பு மருத்துவரைத் தேர்வுசெய்வதற்குக் குடும்ப மருத்துவரின் வழிகாட்டுதல்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும். பயனாளிகள் தாங்களாகவே சிறப்பு மருத்துவரை அணுகுவதைவிட இந்த வழியில் செல்லும்போது அவர்களுக்கு மிகச் சரியான மருத்துவமும் கூடுதல் கவனமும் கிடைக்க வாய்ப்புண்டு.

சிறப்பு மருத்துவரிடம் இரண்டாம் ஆலோசனை கேட்கும்போது, முதலில் பார்த்த மருத்துவரின் முடிவு சரியா, தவறா என்பதையும், அவர் கொடுக்கும் சிகிச்சையைவிட வேறு சிறந்த சிகிச்சை அதற்கு உள்ளதா என்பதையும் தெளிவாகக் கேட்டுக்கொள்ள வேண்டும். தாம் தேர்வுசெய்த சிறப்பு மருத்துவரிடம் பயனாளியின் நோயும் பரிசோதனை விவரங்களும் உறுதி செய்யப்பட்டுவிட்டன என்றால் அதில் நம்பிக்கை வைத்து சிகிச்சையைத் தொடர வேண்டும். சிகிச்சை அளிக்கும் மருத்துவரின் மீதும் மருத்துவமுறை மீதும் நம்பிக்கை வைத்தால்தான் எந்தவொரு சிகிச்சையும் வெற்றி அடையும். நம்பிக்கையும் இல்லாமல் சிகிச்சையையும் தொடராமல் மருத்துவர்களை மட்டும் மாற்றிக் கொண்டே இருந்தால் பயனாளிக்குக் குழப்பங்கள் தான் மிஞ்சும்; இழப்புகளும் ஏற்படலாம்.

- V. அருணாச்சலம்

# கொரோனா போன்று கொல்லும் TikTok



நமது கையடக்கத்தில் உள்ள செல்போன் பிடியில் நாம் அனைவருமே சிக்கிக்கொண்டு விட்டோம் சமூகவலைதளங்களில் நாள்தோறும் புதிய புதிய செயலிகள் அறிமுகமாகிக் கொண்டே இருக்கிறது. இவற்றை செல்போனில் பதிவிறக்கம் செய்து பயன்படுத்துவோரின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. சமூக வலைதள செயலிகளால் நன்மைகள் இருந்தாலும், பாதிப்பும் அதற்கு இணையாக இருக்கிறது என்பதை மறுப்பதற் கில்லை. எந்தவொரு செயலியாக இருந்தாலும் கட்டுப்பாடுடன் அளவோடு பயன்படுத்தும் போது அதனால் நமக்கு நன்மையே விளைகிறது. அதே நேரம் சில செயலிகளை பதிவிறக்கம் செய்யும் மக்கள் அதற்கு அடிமையாகிவிடுவது தான் மோசமான பாதிப்புகளை தருகிறது. பொழுதுபோக்கு செயலிகள் பல உயிரையே போக்கிடும் செயலிகளாக கூட உள்ளது.

குறிப்பாக மாணவர்கள் விளையாடும் பப்ஜி போன்ற செயலிகளால் பலர் தற்கொலை செய்து கொண்ட சம்பவங்களும் அரங்கேறி உள்ளன. செல்போனில் மக்கள் தற்போது அதிகளவில் பயன்படுத்தும் செயலிகள் வரிசையில், வாட்ஸ்ஆப், டிக்டாக், பேஸ்புக் இடம்பிடித்துள்ளன. இந்த செயலிகள் அன்றாட தேவையாகவும், வாழ்க்கையின் அங்கமாகவும் மாறிவிட்டன. வாட்ஸ்ஆப் தகவல் பரிமாற்றத்துக்கு மிகச்சிறந்த செயலியாக விளங்குகிறது. கடந்த ஆண்டு 85 கோடி பேர் பயன்படுத்தும் செயலியாக வாட்ஸ்ஆப் அறியப் பட்டுள்ளது. இதே போன்று பேஸ்புக் செயலியையும் பலகோடி மக்கள் பயன்படுத்து கின்றனர். இந்நிலையில் பேஸ்புக் செயலியை பின்னுக்கு தள்ளி கடந்தாண்டு டிக்டாக் செயலி 39 சதவீதம் அதிகரித்து முன்னேறியுள்ளது. அதாவது 70 கோடி மக்கள் டிக்டாக் செயலியை பதிவிறக்கம் செய்து பயன்படுத்துகின்றனர்.

இந்த செயலியை பாடல்களை பாடுவது, நடிப்பது, நகைச்சுவையை வெளிப்படுத்துவது என்று பலர் தங்கள் திறமைகளை உலா வரவிடும் பொதுமேடையாக பயன்படுத்துகின்றனர். இளைஞர்கள், மாணவிகள், இல்லத்தரசிகள், அலுவலகம் செல்வோர் என்று அனைத்து தரப்பினரும் டிக்டாக் செயலி ரசிகர்களாக விளங்கு கின்றனர். வாட்ஸ்ஆப், பேஸ்புக்கில் இருக்கும் ஆபத்து இந்த செயலியிலும் இருக்கத்தான் செய்கிறது. முகநூலை போன்று டிக்டாக் செயலியிலும் ஹேக்கர்களால் அதிகளவு ஆபத்துள்ளது என்று செக்பாயிண்ட் நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஆனால் ஆபத்தை உணர்ந்திருந்தாலும் மக்களிடம் டிக்டாக் மோகம் குறைந்தபாடில்லை. இந்த செயலி மூலம் டிரெண்டிங் ஆகி பிரபலமடைந்தவர்களும் இருக்கிறார்கள். ஆனால் தவறான தொடர்பால் சிக்கி பிரச்னைகளை சந்தித்தவர்களும் இருக்கிறார்கள். கைபேசியில் இருக்கும் செயலியை பயன்படுத்தும் போது சுயகட்டுப்பாடும் அவசியமாகிறது. முன் பின் அறிமுகமில்லாதவர்களாக இருந்தாலும், எந்த நாட்டில் வசிப்பவர்களானாலும் இந்த செயலிகள் மூலம் தொடர்பு கொள்ள முடிகிறது. எனவே, இவற்றை உணர்வுபூர்வமாக பயன்படுத்தாமல், நமது தேவைக்குத் தான் செல்போன் மற்றும் சமூகவலைதள செயலிகள் என்பதை உணர்ந்துகொண்டு பயன்படுத்தினால் ஆபத்து நெருங்காது என்பது குறிப்பிடத்தக்கது.

– சச்சின்

# டிஎன்பிஎஸ்சி-யில்

## கரும்புள்ளிகளா? கருப்பு ஆடுகளா?

அரசுப் பணிக்கு தகுதியானவர்களை தேர்வு செய்யும்போது டிஎன்பிஎஸ்சி நிர்வாகம் தனது அரசியல் சாசன பொறுப்புகளை தட்டிக்கழிக்கக் கூடாது என உயர் நீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது. இதுதொடர்பாக புதுச்சேரியைச் சேர்ந்த ஏ.கே.ஆனந்த் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த மனுவில், "கடந்த 2014-15, 2016-17 ஆண்டுகளில் சிவில் நீதிபதிகள் தேர்வுக்கு விண்ணப்பித்து ஆரம்பகட்ட மற்றும் பிரதான தேர்வுகளை எழுதினேன். இதையடுத்து, கடந்த 2018 அக்டோபரில் நடந்த நேர்முகத்தேர்விலும் பங்கேற்றேன். அதன்பிறகு என் மீது தொடரப்பட்டிருந்த குற்ற வழக்கு தொடர்பான நீதிமன்ற உத்தரவு மற்றும் சாதி சான்றிதழை சமர்ப்பிக்க டிஎன்பிஎஸ்சி உத்தரவிட்டது.



அந்த வழக்கில் விடுதலையானது தொடர்பான நீதிமன்ற உத்தரவை சமர்ப்பித்து சாதி சான்றிதழை பெற்றுத்தர 2 வாரம் அவகாசம் கோரினேன். அதன்பிறகு விழுப்புரம் வட்டாட்சியர் எனக்கு வழங்கிய ஆதிதிராவிடர் வகுப்பினருக்கான சாதிச் சான்றிதழை 2018 நவம்பரில் டிஎன்பிஎஸ்சிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பினேன். அதை டிஎன்பிஎஸ்சி பெற்றுள்ளது. ஆனால் எனது சாதிச் சான்றிதழை நான் உரிய முறையில் ஒப்படைக்கவில்லை எனக்கூறி என்னை சிவில் நீதிபதி பணிக்கு தேர்வு செய்யாமல் நிராகரித்து 2018 டிசம்பரில் உத்தரவிட்டது. எனவே எனக்கு சிவில் நீதிபதி பணி வழங்க டிஎன்பிஎஸ்சி-க்கு உத்தரவிட வேண்டும்" என அதில் கோரியிருந்தார்.

இந்த வழக்கு விசாரணை நீதிபதிகள் வி.பாரதிதாசன், வி.பார்த்திபன் ஆகியோர் அடங்கிய அமர்வில் நடந்தது. மனுதாரர் சார்பில் மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் ஆஜராகி, "சாதிச் சான்றிதழை டிஎன்பிஎஸ்சி நிராகரித்து இருப்பது துரதிர்ஷ்டவசமானது. இது அரசியலமைப்பு சட்டம் அடித்தட்டு மக்களுக்கு வழங்கும் உரிமையில் தலையிடுவதுபோல் ஆகும். காலதாமதத்தை ஒரு காரணமாகக்கூறி இட ஒதுக்கீடு உள்ளவர்களுக்கு அரசுப்பணி வழங்க மறுக்கக்கூடாது என பல வழக்குகளில் உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. ஆனால் டிஎன்பிஎஸ்சி நிர்வாகம் சாதாரண காரணத்தைக்கூறி ஒரு சிவில் நீதிபதிக்கு தேர்வானவரின் பெயரை நிராகரித்துள்ளது" என வாதிட்டார். அப்போது டிஎன்பிஎஸ்சி தரப்பில் வழக்கறிஞர் நிறைமதி ஆஜராகி, "அவர் குறித்த காலத்துக்குள் சாதிச்சான்றிதழை ஒப்படைக்கவில்லை என்பதால் தான் அவருடைய பெயர் நிராகரிக்கப் பட்டது" என வாதிட்டார்.

இருதரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதிகள், "சாதிச் சான்றிதழ் பெறுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. இது மனுதாரரின் தவறு அல்ல. குறிப்பாக எஸ்சி, எஸ்டி பிரிவினர் சாதிச் சான்றிதழ் கோரி விண்ணப் பித்தால் விசாரணை, ஆய்வு என பல்வேறு நடைமுறைகளைக் காரணம் காட்டி அதிகாரிகள் தாமதம் செய்கின்றனர். அரசுப் பணிக்கான நியமனங்களை வழங்கும் பிரதான ஆணையமாக செயல்படும் டிஎன்பிஎஸ்சி நிர்வாகம், இதுபோன்ற தவறான அணுகுமுறையை கடைபிடிக்கக்கூடாது. பொதுவாக அரசுப்பணிக்கு தேர்வு செய்யும்போது, இதுபோன்ற தொழில்நுட்ப காரணங்களைக் கூறி தகுதியானவர்களை நிராகரிக்கக்கூடாது. எனவே, மனுதாரருக்கு சிவில் நீதிபதி பணி வழங்க மறுத்த டிஎன்பிஎஸ்சியின் உத்தரவு ரத்து செய்யப்படுகிறது. மனுதாரருக்கு உரிய பணி வழங்குவது தொடர்பான நடைமுறைகளை டிஎன்பிஎஸ்சி 8 வாரங்களுக்குள் முடிக்க வேண்டும்" என உத்தரவிட்டுள்ளனர்.

- M. தரணி

# ஆர்ஓ தண்ணீர் சுத்திகரிப்பான்களுக்கு தடை

ரிவர்ஸ் ஆஸ்மாசிஸ் எனப்படும் RO அடிப்படையிலான (தலைகீழ் சவ்வூடுபரவல் முறை) தண்ணீர் சுத்திகரிப்பான்களை தடை செய்வது தொடர்பாக அறிவிப்பாணையை வெளியிட வேண்டும்என்று மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறைக்கு (எம்ஓஇஎப்) தேசிய பசுமைத் தீர்ப்பாயம் (என்ஜிடி) உத்தரவிட்டுள்ளது. ஆனால் இதை அமல்படுத்த 4 மாதம் தேவைப்படுகிறது என மத்திய அமைச்சகம் அவகாசம் கோரியுள்ளது. ஆழ்குழாய் மூலம் பெறப்படும் நிலத்தடி நீரை சுத்திகரிக்க ஆர்ஓ முறை நாடெங்கிலும் பரவலாக்கப்பட்டுள்ளது. இதற்காக ரூ.5 ஆயிரம் முதல் ஆர்ஓ தண்ணீர் சுத்திகரிப்பான்கள் சந்தையில் கிடைக்கின்றன. இதை ஏராளமான மக்கள் பயன்படுத்தி வருகின்றனர்.


**புதிய உத்தரவு:** இந்நிலையில் ஆர்ஓ தண்ணீர் சுத்திகரிப்பான் தொடர்பான ஆய்வு முடிவுகள் குறித்து நிபுணர் குழு, தேசிய பசுமைத் தீர்ப்பாயத்தில் அறிக்கை தாக்கல் செய்தது. இதையடுத்து தீர்ப்பாயம் மத்திய அமைச்சகத்துக்கு ஒரு புதிய உத்தரவைப் பிறப்பித்துள்ளது. ஒரு லிட்டர் குடிநீரில், நீரில் கரைந்துள்ள திடப்பொருளின் மொத்த அளவு (TDS-Total Dissolved Solids) 500 மில்லி கிராமுக்கும் குறைவாக இருக்கும் வகையில் குடிநீரை சுத்திகரிக்கும் ஆர்ஓஇயந்திரங்களுக்கு தடை விதிப்பது குறித்த அறிவிப்பாணையை இரு மாதங்களுக்குள் வெளியிட வேண்டும் என்று மத்திய சுற்றுச்சூழல்



அமைச்சகத்துக்கு தேசிய பசுமை தீர்ப்பாயம் உத்தரவிட்டுள்ளது. இதுதொடர்பான உத்தரவை என்ஜிடி தலைவர் நீதிபதி ஆதர்ஷ் குமார் கோயல் பிறப்பித்துள்ளார்.

இந்த வகை ஆர்ஓ முறையால் பெறப்படும் குடிநீர் பொதுமக்களின் சுகாதாரத்துக்கும், சுற்றுச்சூழலுக்கும் பாதிப்பு ஏற்படுகிறது. எனவே இதை தடை செய்யவேண்டும். இந்த உத்தரவை விரைவாக அமல்படுத்தவேண்டும். 2 மாதங்களுக்குள் தடை செய்வது தொடர்பாக அறிவிப்பாணையை மத்திய அரசு வெளியிடவேண்டும் என்று நீதிபதி தெரிவித்தார்.

**மேலும் அவகாசம் தேவை:** இதையடுத்து இந்த தேசிய பசுமைத் தீர்ப்பாயத்தின் ஆணையை செயல்படுத்த 4 மாத அவகாசம் தேவைப்படுகிறது என்று மத்திய சுற்றுச்சூழல், வனத்துறை அமைச்சகம் என கோரியுள்ளது. இதுதொடர்பாக




பசுமைத் தீர்ப்பாயத்தில் சுற்றுச்சூழல், வனத்துறை அமைச்சகம் சார்பில் தாக்கல் செய்துள்ளஆவணத்தில் கூறும்போது, "சுற்றுச்சூழலைப் பாதுகாக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறோம்.

**கருத்து, ஆலோசனை:** அந்த அறிவிப்பாணையை வெளியிட்டு அதை செயல்படுத்த சிறிது கால அவகாசம் தேவைப்படுகிறது. அனைவருக்கும் தெரியப் படுத்தி, கருத்துகள், ஆலோசனைகளைக் கேட்க 2 மாத கால அவகாசம் போதுமானதாக இருக்காது. மேலும் சட்டம் மற்றும் நீதித்துறையிடமிருந்து ஒப்புதலைப் பெறவேண்டும். எனவே, 4 மாத அவகாசம் இருந்தால் இந்த உத்தரவுகளை செயல்படுத்த முடியும். ஆனால் அதே நேரத்தில் 2 மாத கால அவகாசத்திலேயே நாங்கள் அதைச் செயல்படுத்த முயல்கிறோம்" என்று கூறப்பட்டுள்ளது. இதையடுத்து வழக்கை மார்ச் 23-ம் தேதிக்கு நீதிபதி ஒத்திவைத்தார்.

**சென்னை குடிநீர் வாரிய அதிகாரி விளக்கம்:** இந்த உத்தரவு தொடர்பாக சென்னை குடிநீர் வாரிய உயரதிகாரி ஒருவர் கூறியதாவது: சாதாரண நீரில் சுண்ணாம்பு, மெக்னீஷியம், பாஸ்பேட், இரும்பு, பைகார்பனேட் போன்ற பல்வேறு சத்துக்கள் கரைந்துள்ளன. அதன் அடர்த்தியை டிடிஎஸ் என அளவிடுகிறோம். ஒரு லிட்டர் நீரில் கரைந்துள்ள இந்த சத்துக்களின் மொத்த அளவு 500 மி.கி-க்கு குறைவாக இருக்கக் கூடாது. குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரங்களில் நீரை சுத்திகரிக்கும்போது, டிடிஎஸ் அளவு 500 மி.கி அளவுக்கு கீழ் சென்றுவிட வாய்ப்புள்ளது. இதுபோன்ற நீரை குடிப்போரின் உடலில் எலும்பு உறுதி தன்மை இழத்தல் போன்ற பல்வேறு உடல்நல பிரச்சினைகள் ஏற்படும். எனவே, எதிர்கால சந்ததியினரின் ஆரோக்கியத்தை கருத்தில் கொண்டு, அந்த இயந்திரங்களுக்கு தடை விதிக்க உத்தரவிட்டிருப்பார்கள்.

**– சரவணன்**

# மக்கள் விசாரணை-யின் 8ஆம் ஆண்டு விழா சிறப்புத் தொகுப்பு

மக்கள் விசாரணையின் 8ஆம் ஆண்டு விழா, 19-01-2020 அன்று சென்னை, எம்.ஜி.ஆர் நகரில் உள்ள ஜாய்லின் ஹாலில் மக்கள் விசாரணையின் ஆசிரியர் முனைவர் ஆ.மவுரியன் முன்னிலையில், இணை ஆசிரியர் வ.அருணாச்சலம் தலைமை ஏற்க மிக சிறப்பாக நடைபெற்றது. மற்றும் சிறப்பு விருந்தினராக கல்வி டுடே ஆசிரியர் ராமசுப்ரமணியன், பீபிள் டுடே ஆசிரியர் சத்தியநாராயணன், கடல் துளிகள் ஆசிரியர் யுவராஜ் ஆகியோர் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்கினார்கள். மற்றும் மக்கள் விசாரணையின் துணை ஆசிரியர்கள், முதன்மை செய்தியாளர்கள், நிருபர்கள், புகைப்பட கலைஞர்கள் என 150க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டு விழாவை சிறப்பித்தார்கள். விழாவில் அனைத்து நிருபர்களுக்கும் பொன்னாடை போர்த்தி லேப்டாப் பேக் மற்றும் நற்சான்றிதழ் வழங்கி கவுரவிக்கப்பட்டனர்.





























மக்கள் விசாரணை




மக்கள் விசாரணை








# நேற்று - இன்று - நாளை

நேற்று - நடந்தது
இன்று - நடப்பது
நாளை - நடக்கும்

நேற்று - நினைவு
இன்று - நிஜம்
நாளை - கனவு

நேற்று - தெரிந்தது
இன்று - தெரியும்
நாளை - தெரியாது

நேற்று - கருவறை
இன்று - வாழ்க்கை
நாளை - கல்லறை







நேற்று - பெற்றோர்
இன்று - நீ
நாளை - பிள்ளை

நேற்று - சம்பவம்
இன்று - சாதனை
நாளை - சரித்திரம்

நேற்று - ஆரம்பம்
இன்று - பயணம்
நாளை - இறுதிச்சுற்று

நேற்று - தோல்வி
இன்று - விடாமுயற்சி
நாளை - வெற்றி

நேற்று - படி
இன்று - ஏணி
நாளை - நம்பிக்கை

நேற்று - மூடநம்பிக்கை
இன்று - தன்னம்பிக்கை
நாளை - நம்பிக்கை

நேற்று - தோழி
இன்று - காதலி
நாளை - மனைவி

நேற்று - நண்பன்
இன்று - நண்பன்
நாளை - நண்பன்

**கவிஞர் நிவேதிதா**

# பயோடீகிரேடபிள் பிளாஸ்டிக் இயற்கையாக மக்காது

## ஐநா சுற்றுச்சூழல் மன்றம் எச்சரிக்கை

ஒருமுறை பயன்படுத்தி தூக்கி எறியப்படும் பிளாஸ்டிக் பைகளுக்கு மாற்றாக தமிழக அரசு அனுமதித்துள்ள பயோடீகிரேடபிள் பிளாஸ்டிக் பைகள் இயற்கையாக மக்காது என ஐநா சுற்றுச்சூழல் மன்றம் எச்சரித்துள்ளது.

ஒருமுறை பயன்படுத்தி தூக்கி எறியப்படும் 14 வகையான பிளாஸ்டிக் பொருட்களுக்கு தமிழக அரசு தடை விதித்துள்ளது. கடந்த ஆண்டு ஜனவரி 1-ம் தேதி முதல் அமலில் உள்ளது. பிளாஸ்டிக் தடை தொடர்பான அரசாணையில், பெட்ரோலிய பொருட்கள் அல்லாத மக்கும் தன்மையுள்ள, மக்கும்போது காற்று, நீர், கனிமமாக மாறும் தன்மையுள்ள பொருட்களைக் கொண்டு தயாரிக்கப்படும் (பயோடீகிரேடபிள்) பிளாஸ்டிக் பைகளுக்கு, தடையிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. அதனால் தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம், உள்ளாட்சி அமைப்புகள், பயோடீகிரேடபிள் பிளாஸ்டிக் பைகள் பயன்பாட்டை அனுமதித்துள்ளது. அதில் போலிகளையும் கண்டறிய முடியவில்லை. இதற்கிடையில் இந்த வகையான பிளாஸ்டிக்கும் எளிதில்



மக்காது என ஐநா சுற்றுச்சூழல் மன்றம் எச்சரித்துள்ளது.

அந்நிறுவனம் வெளியிட்டுள்ள ஒருமுறை பயன்படுத்தி தூக்கி எறியப்படும் பிளாஸ்டிக் தொடர்பான ஆய்வறிக்கையில் கூறியிருப்பதாவது:

பிளாஸ்டிக்கால் ஏற்படும் மாசுவை குறைக்கும் விதமாக பெரும்பாலான அரசாங்கங்கள், வழக்கமாக பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் பைகளுக்கு தடை விதித்து, பயோடீகிரேடபிள் பைகளை பயன்படுத்த அனுமதிக்கின்றன. இந்த வகை பிளாஸ்டிக், குறிப்பாக ஒருமுறை பயன்படுத்தி தூக்கி எறியப்படும் பைகள் மற்றும் கிண்ணங்கள் ஆகியவை, உயர் வெப்பநிலையில் 50 டிகிரி செல்சியஸுக்கு மேல் நீண்ட காலத்துக்கு இருந்தால் மட்டுமே முழுமையாக சிதைவடையும். இதுபோன்ற வெப்ப சூழல், கழிவுகளை எரிக்கும் உலைகளில் மட்டுமே இருக்கும். எனவே, மக்காச்சோள மாவு, மரவள்ளிக் கிழங்கு, கரும்பு மற்றும் சர்க்கரை அல்லது கொழுப்பு வகைகளை பாக்டீரியாவால் நொதிக்க செய்து தயாரிக்கப்படும் பயோடீகிரேடபிள் பிளாஸ்டிக், சூரிய ஒளி, காற்று, நீர் மூலமாகவோ, கடலிலோ தானாக சிதைவடையாது. இவ்வாறு ஐநா சுற்றுச்சூழல் மன்ற ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிலையில், தமிழகத்தில் பயோடீகிரேடபிள் பிளாஸ்டிக் பைகளை அனுமதித்து வருவது குறித்து தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரிய அதிகாரிகளிடம் கேட்டபோது "மத்திய மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் அறிவுறுத்தல் அடிப்படையில் அனுமதித்து வருகிறோம். ஐநா சுற்றுச்சூழல் மன்றம் தெரிவித்திருப்பது குறித்து, மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகம் மற்றும் மத்திய மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்திடம் தெரிவித்து, அவை தரும் விளக்கம் அடிப்படையில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்" என்றனர்.

– **வீர ஆறுமுகம்**


**விளம்பரக் கட்டணம்**

| | |
|---|---|
| முழு பக்கம் கலர் பின் பக்கம் அட்டை | ரூ. 20,000 /- |
| முழு பக்கம் கலர் பின் பக்கம் உள் அட்டை | ரூ. 15,000 /- |
| முழு பக்கம் கலர் முன் பக்கம் உள் அட்டை | ரூ. 15,000 /- |
| அரை பக்கம் கலர் | ரூ. 8,000 /- |
| முழு பக்கம் கருப்பு வெள்ளை | ரூ. 9,000 /- |
| அரை பக்கம் கருப்பு வெள்ளை | ரூ. 5,000 /- |

**மக்கள் விசாரணை**

எண். 7/13, பொன்மனச் செம்மல் தெரு, எம்.ஜி.ஆர். நகர்,
சென்னை – 600 078. Email : news@makkalvisaranai.com
Cell : 93821 33334, 93821 44446

ஒரு பக்க சிறுகதை

# அம்மா மீனாட்சி! என்னடி இது சோதனை?



“அம்மாடி! மீனாக்ஷி! ராஜ உத்தரவு! மடப்பள்ளில நிறைய நைவேத்யம் பண்ணனும்! முடியல்லே! சித்த தூங்கிக்கறேன்! மறக்காத நேரத்துக்கு எழுப்பிடுடீ! மறந்துடாதே” மீனலோசனையின் மீதுள்ள அதீதமான உரிமையால் ஸ்ரீநிவாஸர் தேவிக்கே உத்தரவிட்டு, மடப்பள்ளியை உள்பக்கமாய் தாழ் போட்டுக்கொண்டு உறங்கிப்போனார். தடதடவென சத்தம். “யார் மடப்பள்ளி கதவை இப்படி உடைக்கறது!!” கோபத்துடன் எழுந்த ஸ்ரீநிவாஸர் கதவைத் திறந்து பார்த்தால் ராஜ ஸேவகர்கள்.

“என்னங்கானும்! நீர் கதவை அடைச்சுண்டு உள்ள என்ன பண்றீர்! காலத்துக்கு அம்பாளுக்கு நைவேத்யம் ஆக வேண்டாமா? குருக்கள் காத்துண்ட்ருக்கார். நைவேத்யம் எடுத்துண்டு வாங்கோ” ராஜ ஸேவகர்களோடு வந்த பட்டரின் குரல். “ஐயோ! மீனாக்ஷி! கைவிட்டுட்டியேடீ! எழுப்பி விடுன்னு சொன்னேனே. ஒரு நைவேத்யமும் தயாராகலையே. நான் என்ன பண்ணுவேன். அம்மா! ராஜதண்டனைதான் எனக்கு இன்னிக்கு” பயத்திலும் அதிர்ச்சியிலும் உறைந்தார் ஸ்ரீநிவாஸர். “நகருங்காணும்” பட்டரொடு நான்கைந்து பேர் நுழைந்தனர் உள்ளே “ஆஹா! சக்கரைப் பொங்கல், தேங்காய் சாதம், புளியஞ்சாதம், எலுமிச்சை சாதம், போளி, வடை, பால் பாயசம், ஒன்னு பாக்கியில்லையே ஓய். இத்தனையும் தனியாவா பண்ணேள்! ஒன் சிஷ்யாள்ல்லாம் அண்ணா கதவை சாத்திண்டார். எப்படி திறக்கறதுன்னு தெரியல்லேன்னு புலம்பிண்ட்ருந்தாளே!“ சொன்னவரின் கண்கள் சர்க்கரை பொங்கலிலும், போளியிலுமே இருந்தது. மீனாக்ஷிக்கு நைவேத்யம் ஆனதும் ஸோமசுந்தரன் இதை சாப்டறானோ இல்லையோ, நாம சாப்டுடனும் அவர் மனது துடித்துக் கொண்டிருந்தது.

ஸ்ரீநிவாஸருக்கு ஒரே குழப்பம். “என்னதிது! நாம தான் எழுந்துக்கவே இல்லையே! யார் இதெல்லாம் பண்ணிருப்பா!” நிகழ்வின் ப்ரமிப்பில் ஸ்ரீநிவாஸர் விலகவில்லை. “உம் கைக்கு தங்க மோதரம் போடனும் ஓய்! வாரும்! மீனாக்ஷிக்கு தீபாராதனை ஆகப்போறது. பார்ப்போம்.” எல்லோரும் சிவராஜமாதங்கியின் ஸந்நிதிக்கு விரைந்தனர். குருக்கள் அம்பாளுக்கு நைவேத்யம் செய்து பின் தீபாராதனைக்கு திரையை விலக்கினார். “ஐயோ! மாணிக்க மூக்குத்தி காணுமே! அம்மா மீனாக்ஷி! என்னடி சோதனை இது.” குருக்களின் கதறல் மீனாக்ஷி கோவிலுக்கு வெளி வரை எதிரொலித்தது. மீனலோசனையின் அழகையே மெருகூட்டும் மூக்குத்தி தொலைந்த துக்கம் ராஜாவிற்கும், மற்ற அனைவருக்கும். ஸ்ரீநிவாஸருக்கோ நடப்பதைக் கண்டு பயம். அபசாரம் நிகழ்ந்ததோ என்று!!

“அம்மா மீனாக்ஷி” ஸ்ரீநிவாஸர் கண்களில் ஜலம் பெருக கதறி மீனாம்பாளின் பாதத்தில் விழுந்தார். “அம்மா! அம்மா!ன்னு ஸதா கூப்பிட்டதற்கு நீயே எனக்காக நைவேத்யம் சமைச்சிருக்கியே! தாயே! நான் என்ன பாக்யம் பண்ணேன்” கண்ணீர் கண்களை மறைக்க கதறினார் ஸ்ரீநிவாஸர். “தாயே மீனாக்ஷி!! தாயே மீனாக்ஷி!” லக்ஷக்கணக்கான ஜனங்கள் நடந்த அதிசயத்தைக் கண்டு திரண்டனர் கோவிலில்!!

ராஜனும் அமைச்சரும் ஸ்ரீநிவாஸரை ஸாஷ்டாங்கமாய் நமஸ்கரித்தனர் “ஸ்வாமீ! நீரே மீனாக்ஷி! மீனாக்ஷியே நீங்க!” வேறொன்றும் சொல்லத் தோணவில்லை யார்க்கும். “மீனாக்ஷி! மீனாக்ஷி!” திக்கெட்டும் அம்மையின் நாமம் ஒலித்தது. ராஜராஜேச்வரியான மாதங்கிக்கு தீபாராதனை காட்டப்பட்டது. “பாகம் செய்து என் நாவை பாடவும் செய்தாய் தாயே.


“ஊகமிலார்க்கு இன்னும் உதவினாய் சோகந்நீர்
நாதநலம் நாட்டுகின்ற நான்மறையாம் தண்டை சேர்
பாதநிழல் யான் தங்கப்பண்”

ஸ்ரீநிவாஸரின் நா பாடத்தொடங்கியது!! ஆம் கல்வியறிவு இல்லாத ஸ்ரீநிவாஸர் கவிஸ்ரீநிவாஸர் ஆனார். காமாக்ஷி பட்டாரிகை மூககவிக்கருளியது போல், அகிலாண்டநாயகி காளமேகத்திற்கு அருளியது போல், மீனாக்ஷம்மை ஸ்ரீநிவாஸர்க்கு அருளி விட்டாள். படிப்பறிவில்லா ஸ்ரீநிவாஸர் பராசக்தி கடாக்ஷத்தால் கவிமாரி பொழிந்தார். “மீனாக்ஷி! மீனாக்ஷி!” நாமம் ஒன்று போதாதோ! மோக்ஷமே கைமேல்.

**- கவிஞர் நிவேதிதா**

கதைகளில் வரும் பெயர்களும், நிகழ்ச்சிகளும் கற்பனையே. இதழ்களில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மை தன்மைக்கு நிர்வாகம் பொறுப்பல்ல. பேட்டிகள் மற்றும் சிறப்புக் கட்டுரைகள் எழுத்தாளர்கள் சொந்தக் கருத்துக்களே. **Press & Registration of Book Act-in** ன்படி செய்திகள் தேர்வுக்கு ஆசிரியர் மட்டுமே பொறுப்பாவார். எல்லா வழக்குகளும் சென்னையில் உள்ள உரிய நீதிமன்றங்களின் வரம்பிற்கு மட்டுமே உட்பட்டது.

MAKKAL VISARANAI Owned and Published by A. Mouriyan, from No.3, Anna Veethi 1st Street, MGR Nagar, Chennai - 600 078.
Printed by : S.ALI MOHAMMAD SYEED, at J.M.PROCESS, 22/49, Subedhar Hussain Street, Border Thottam, Royapettah, Chennai-14. Editor: A.MOURIYAN.





# BIMAR NAHI RAHA LACHAAR, HO RAHA MUFT UPCHAAR

## World's largest healthcare scheme PM-JAY will make India, 'Ayushman'.

For the first time in the history of India, crores of poor and vulnerable Indians will benefit through the Pradhan Mantri Jan Arogya Yojana, PM-JAY. Now every entitled family will have access to cashless and paperless healthcare coverage for all critical diseases.

- Benefits to over **10 crore** poor and vulnerable families and more than **50 crore** beneficiaries across the country
- Annual healthcare benefits of up to **Rs. 5 Lakh** for every entitled family
- Access to healthcare services in all government and empanelled private hospitals

Toll-Free helpline number
**14555/1800111565**

www.pmjay.gov.in /AyushmanBharatGOI /AyushmanNHA

**MAKKAL VISARANAI**, Tamil Monthly. Regd. No.: **TN/CC(S)DN/461/19-21**
Registered with Registrar of Newspaper for India Under **No.: TNTAM44870/2012**
Posted at EGMORE RMS / 1 Patrika Channel Posted Date of Publication 15th of Every Month




Also visit our MAKKAL VISARANAI website http://makkalvisaranai.com/ and enjoy reading more

Scan now to download the eBook (PDF)

Scan now to download the App